உதயன்

சுடர் : 36 | கதிர் : 252 | சனிக்கிழமை | ஆடி 22 ஆம் நாள் 07 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## சந்நிதியான் ஆச்சிரமம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 7
செல்வச்சந்நிதி கோவில் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தல் 19

## ஒரே நாளில் 98 பேர் சாவு தொற்றுடன் 2, 792 பேர்

கொழும்பு, ஓக. 7
இலங்கையில் மேலும் 98 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். சுகா 19

# நாட்டை முடக்கோம் கட்டுப்பாடுகள் இறுகும்

### அரச நிகழ்வுகள் அனைத்தும் ஒத்திவைப்பு
### இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 7
நாடுதழுவிய முடக்கத்தை இப்போதைக்கு விதிப்பதில்லை என்று நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். எனினும், தளர்த்தப்பட்டிருந்த சுகாதார ஒழுங்கு விதிகள் சிலவற்றை மீண்டும் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். 19

## முன்னாள் அரசியல்கைதி ரி.ஐ.டியினரால் அழைப்பு

வவுனியா, ஓக. 7
வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்துவரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரை, வாக்குமூலம் வழங்குவதற்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் அழைத்துள்ளனர். செல்வநாயகம் ஆனந் தவர்மன் என்பவ 19

## சங்கிலித் திருடன் சிக்கினான்

யாழ்ப்பாணம், ஓக. 7
வட்டுக்கோட்டையில், வீடு ஒன்றில் திருடப்பட்ட நகைகளில் ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். 19

## காரணமின்றி மக்களை கைதுசெய்யாதீர்

*பொலிஸாருக்கு நீதிவான் எச்சரிக்கை*

கொழும்பு, ஓக. 7
"காரணமின்றி நாட்டு மக்களை கைதுசெய்து நீதி மன்றில் முற்படுத்த வேண்டாம்." என்று கொழும்பு பிரதம நீதிவான் புத்திக ஸ்ரீராகல பொலிஸாரைக் கடுமையாக எச்சரித்தார். அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மூன்று செயற்பாட்டாளர்கள், மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் 19

## அடக்குமுறைகளை ஆரம்பிக்கிறது அரசு

- காரணமின்றிக் கைதாவீர்கள், கொல்லப்படுவீர்கள்!
- பொலிஸாரால் ஆள்மாறிக் கைதுசெய்யப்படவிருந்த பல்கலை. விரிவுரையாளர் பகிரங்கமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 7
"அரசு அடக்குமுறையைத் தொடங்குகிறது. பொலிஸார் சம்பந்தமேயில்லாது என்னைக் கைதுசெய்ய வந்தபோது என்னுடன் நின்ற சக விரிவுரையாளர்கள், எனக்குத் துணையாக, ஆதரவாக வாதாடினர். அது நாளை உங்களுக்கும் வரலாம். ஆனால் அது வரும்போது உங்களுக்காக யாரும் இருக்க 19

## கொழும்பு சென்று வந்த வவுனியா நபருக்கு டெல்டா தொற்று

வவுனியா, ஓக. 7
வவுனியாவில் டெல்டா வைரஸ் தொற்றுடன் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப்பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாகத் தெரிவுசெய்யப்பட்டோருக்கு 19

## தொற்றாளர்கள் வீடுகளில் தனிமை

*திங்களிலிருந்து நடைமுறைக்கு சுகாதார அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, ஓக. 7
நோய் அறிகுறியற்ற குறைந்த அபாயமுள்ள நோயாளர்களை மருத்துவர்களின் கண்காணிப்பின்கீழ் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தும் நடவடிக்கை நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் நாடு முழுவதும் முன்னெ 18

## கடந்த மாதம் மட்டும் 120 ஆர்ப்பாட்டங்களால் தொற்று அதிகரித்துள்ளது

- ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் சி.ஐ.டி. தெரிவிப்பு
- தடுப்பூசி நிலையங்களில் இரு தரப்புக்கும் ஊசி போடவும்
- நோயாளிகளை சங்கடப்படுத்தவேண்டாமென்றும் ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓக. 7
கடந்த மாதத்தில், நாடு பூராகவும் 120 ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறைந்தது ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டிருந்தனர். சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றாது இவ்வாறு பொதுமக்கள் ஒன்றுகூடுகின்றமை, நாடு பூராகவும் வேகமாக கொவிட் நோய்த் தொற்று பரவுவதற்கு காரணமாகியுள்ளது என்று புலனாய்வுத் துறையினர் சுட்டிக்காட்டினர்.
தடுப்பூசி ஏற்றல் மற்றும் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடும் 18

## தொற்று நிலைமையைக் கருதி ஆர்ப்பாட்டத்தை கைவிடுங்கள்

மருத்துவ நிபுணர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஓக. 7
தேசிய சுகாதார பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு ஆர்ப்பாட்டங்களை தற்காலிகமாக கைவிடுமாறு மருத்துவ நிபுணர்கள் சங்கம் கோரிக்கை 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரிகளின் நெருக்கீடுகளால் ஆசிரியர்களுக்கு மனஉளைச்சல்

## தமிழர் ஆசிரிய சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக. 7**

**அதிகாரிகளின் நெருக்கீடுகளால் அதிபர்களும் ஆசிரியர்களும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். அதன் விளைவுகளால் ஒட்டு மொத்த மக்களும் ஆசிரியர்கள்மீது வசைபாட ஆரம்பித்துள்ளனர். இவற்றை நிவர்த்திசெய்ய கொரோனா அபாயகரமான சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு சமூக முன்னோடிகளாக நடந்துகொள்வோம்.**

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சங்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

தெரிந்தோ தெரியாமலோ தற்போதைய சூழ்நிலையிலும் எங்களால் முடிந்ததை எதிர்கால சந்ததிக்காக வழங்கிக்கொண்டிருக்கிறோம். நாட்டில் ஏற்பட்டுள்ள அபாயகரமான சூழ்நிலைகளால் அனைவருமே மரண பயத்தில் உள்ளனர். இந்தநிலையில், ஆசிரியர்களாகிய நாமே அறிவு சார்ந்தவர்களாக பாமர மக்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். நாட்டிலுள்ள அநேக அரச அலுவலகங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமை சர்வ சாதாரணமாகிவிட்டது. நேற்றுமட்டும் 177 டெல்டா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், கல்வி அமைச்சு வறிய மாணவர்களுக்காக உருவாக்கிய கற்றல் வள நிலையம் கேள்விக்குறியாகியுள்ளது. என்றுள்ளது. (து)

# மனித எச்சங்கள் நேற்றும் மீட்பு

கிளிநொச்சி, ஓக. 7

கிளிநொச்சியில் இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் அகழ்வுப்பணி நேற்றும் மேற்கொள்ளப்பட்டு, அடையாளம் காணப்பட்ட எச்சங்கள் பொதியிடப்பட்டன.

கிளிநொச்சி, பரந்தன் விளாவோடை வயல் பகுதியிலிருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டிருந்தன. குறித்த வயல் காணியில், பாதுகாப்பு அணைக்கட்டு காணப்படுகின்றது. அந்த அணைக்கட்டை அகற்றிய போதே குறித்த எச்சங்கள் வெளிவந்தன. அது தொடர்பில் காணி உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார். குறித்த பகுதியை கிளிநொச்சி நீதிவான் லெனின்குமார் நேற்றுமுன்தினம் பார்வையிட்டிருந்தார். இந்தநிலையில், குறித்த பகுதியில் சட்ட மருத்துவ அதிகாரியும் தடயவியல் பொலிஸாரும் இணைந்து நேற்றும் அகழ்வில் ஈடுபட்டனர். அகழ்வுப் பணிகள் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-6)





### பழைய பொருள்கள் வாங்குவதாக

# பாசாங்கு செய்து கைப்பை 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஓக. 7

பழைய பொருள்கள் வாங்குவதுபோல் பாசாங்குசெய்து வந்தவர்கள், வீட்டிலிருந்த கைப்பையைத் திருடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் மத்தி பகுதியில் நேற்று இடம்பெற்றது. அங்குள்ள வீடு ஒன்றுக்குச்சென்ற இருவரில் ஒருவர், சுழிபுரம் மத்தியில் பழைய பொருள்கள் இருக்கின்றனவா என விசாரிக்க, மற்றையநபர், வீட்டினுள் சென்று அங்கிருந்த கைப்பையை தூக்கிக்கொண்டு தப்பியோட அவரைத் தொடர்ந்து மற்றையவரும் தப்பித்துச் சென்றுள்ளார்.

குறித்த கைப்பையில் பணம் மற்றும் தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (து-27)





# தீயில் நாசமாகிய தற்காலிக வீடு

முல்லைத்தீவு, ஓக. 7

புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராமஅலுவலர் பிரிவில் தற்காலிக வீடு ஒன்று தீப்பிடித்து எரிந்து முற்றாக அழிவடைந்துள்ளது. இந்தச் சம்பவம், நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. அதேபகுதியில் வசித்துவரும் கனகேஸ்வரன் மதீஸ்வரன் என்பவரது தற்காலிக வீடே முழுமையாக எரிந்து அழிந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த தற்காலிக வீட்டில் ஒன்றரை வயதுக் குழந்தை உட்பட மூவர் வசித்துவந்துள்ளனர் என்றும் தீ பற்றிய வேளை அவர்கள் வீட்டுக்கு வெளியே நின்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், தீ பற்றிய வீட்டில் இருந்த உணவுப் பொருள்கள், புடவைகள், பணம், நகை உள்ளிட்ட பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. சமையல் இடம் பெற்றிருந்தவேளை குழந்தையை குளிப்பாட்ட கிணற்றடிக்கு சென்றிருந்தபோது எரிவாயு அடுப்பில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக தீ பற்றியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து-115,19)

# 3 எம்.பிக்களுக்கு தொற்று உறுதி

### ஹரின் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஓக. 7

மேலும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸகுட்டி ஆரச்சி, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன திசாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் ஹம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெதராச்சி ஆகியோரே கொவிட் 19 தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். இவர்கள் மட்டுமன்றி, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சில நாள்களுக்கு முன்னர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இதுதவிர, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். சிறையிலுள்ள ரஞ்சன் ராமநாயக்க தனது உறவினரின் இறுதிச் சடங்கில் சில நாள்களுக்கு முன்னர் பங்கேற்றிருந்தார். அவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த மரணச் சடங்கில் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்தமையாலேயே ஹரின் பெர்னாண்டோ தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (து-இ)

# செல்வச்சந்நிதி சுற்றாடலில் நேற்று பி.சி.ஆர். பரிசோதனை


யாழ்ப்பாணம், ஓக. 7

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் தொண்டுசெய்வோர் மற்றும் கோவில் சுற்றாடலில் நிரந்தர வர்த்தக நிலையங்களை நடத்துவோருக்கு நேற்று பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், சிலர் குறித்த பரிசோதனையை மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால், பரிசோதனை மேற்கொள்ளாதவர்கள் வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது கோவில் பூசகர், உதவியாளர்கள், தொண்டர்கள் மற்றும் கோவில் வளாகத்தில் நிரந்தர வர்த்தக நிலையங்களை நடத்துவோர் ஆகியோருக்கு வல்வெட்டித்துறை கிராமஅலுவலர் அலுவலகத்தில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படுமெனவும் பரிசோதனை அறிக்கை இல்லாதவர்கள் கோவில் பணிகளில் ஈடுபடமுடியாது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, அத்தகைய நபர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் சிலர் நேற்றுமதியம் வரை பி.சி.ஆர். பரிசோதனையில் பங்குபற்றவில்லை. இதனால் அங்குசென்ற சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் பரிசோதனை மேற்கொள்ளாத வர்த்தக நிலையங்களை மூடினர். தொண்டுகளில் ஈடுபடுவோரையும் வெளியேற்றினர். என்று தெரிவிக்கப்பட்டது. (து-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடுப்பூசி பெறாதோருக்கு இன்று மட்டும் சந்தர்ப்பம்

சாவகச்சேரி.ஓக.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான முதலாம் கட்ட கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்றுடன் நிறைவடைகின்றன. எனவே இதுவரை தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் அருகில் உள்ள தடுப்பூசி நிலையங்களில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

கொடிகாமம், கைதடி, வரணி ஆகிய மருத்துவமனைகள் மற்றும் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபம் ஆகியவற்றில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் ஒவ்வாமை ஏற்படுவோருக்கு இன்று சாவகச்சேரி மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றப்படும்.

அதேவேளை எதிர்வரும் 9,10,11 ஆகிய திகதிகளில் ஏற்கனவே முதலாம் கட்ட தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# மணல் அகழ்வு காரணமாக சேதமடையும் யானை வேலிகள்

முல்லைத்தீவு,ஓக.7

முல்லைத்தீவு ஐயன்கன்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளை மணல் அகழ்வில் ஈடுபடுவோர் சேதப்படுத்தி வருகின்றனர் என்று பொது மக்களால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஐயன்கன்குளம் மற்றும் பழையமுறிகண்டி ஆகிய கிராமங்களில் யானை வேலிகள் காணப்படுகின்றன. கனியவளத் திணைக்களத்தால் மணல் அகழ்வுக்கு அனுமதிகள் வழங்கப்படும்போது யானை வேலிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதில்லை.

அத்துடன் மணல் அகழ்வுக்கான அனுமதியைப் பெற்றவர்கள், பெறாதவர்கள் மணல் அகழ்வில் ஈடுபடும் போது யானை வேலிகளை சேதப்படுத்திவிட்டுச் செல்கின்றனர்.

இதனால் யானைகள் கிராமங்களுக்குள் வருகை தந்து மக்களை அச்சுறுத்துவதுடன், பயன்தரு மரங்களையும் அழித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வனவளத் திணைக்களம், கனியவளத் திணைக்களம் மற்றும் ஐயன்கன்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ஐ-13)

# கொரோனா இறப்புப் பட்டியல் இலங்கைக்கு 22 ஆவது இடம்



**கொழும்பு, ஓக.7**

**உலக அளவில் கொரோனாத் தொற்றால் ஏற்படும் இறப்புக்கள் பதிவாகும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 22 ஆம் இடத்தில் உள்ளது.**

அதேவேளை ஆசிய வலய பட்டியலில் இலங்கை 12 ஆவது இடத்தில் உள்ளது. சர்வதேச அளவில் முன்னெடுக்கப்பட்ட கணிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு 10 லட்சம் பேரில், 220 பேர் இலங்கையில் உயிரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த வாரத்தில் நாளொன்றுக்கு 50 தொடக்கம் 60 வரை இறப்புக்கள் பதிவாகின. அதன் பின்னர் தொடர்ச்சியாக 70 தொடக்கம் 100 வரையான இறப்புக்கள் நாளாந்தம் பதிவாகி வருகின்றன. (ஒ.4)

# பெருந்தோட்டத்துறையை பலப்படுத்தக் கூட்டமைப்பு

## மனோ தெரிவிப்பு

கொழும்பு.ஓக.7

பெருந்தோட்டத் துறையைப் பலப்படுத்த தொழிற்சங்க கூட்டமைப்பு உருவாக்கப்படும். தமிழ் முற்போக்குக் கூட்டணி தொழிற்சங்கங்கள் மற்றும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் ஆகியவை இணைந்து இந்த கூட்டு செயற்பாட்டில் இறங்கியுள்ளன என்று தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீனவர்கள் தெருவுக்கு வந்து போராடுகின்றனர். ஆசிரியர் அதிபர் தெருவுக்கு வந்து போராடுகின்றனர். விவசாயிகள் தெருவுக்கு வந்து போராடுகின்றனர். நாங்கள் இன்னமும் தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட தொழிலாளர்களை தெருவுக்கு இறக்கவில்லை. அப்படி இறங்கி போராடினால் தான் அரசுக்குப் புரியும் என்றால் போராட நாம் தயார்.

நாட்டின் நிலைமையையும், தொழிலாளர்களின் நிலைமையையும் மனதில் கொண்டு நாம் அவகாசம் வழங்குகின்றோம். விரைவில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள். நியாயமான தீர்வு வராவிட்டால், தொழிலாளர்களை தெருவுக்கு இறக்கும் நிலைமை உருவாகும். நாட்டின் விலைவாசி பன்மடங்கு உயர்ந்துவிட்டது. சம்பளம் ஆயிரம் என்று எழுத்தில் எழுதி கொடுத்துவிட்டார்கள். ஆனால், எத்தனை நாள் வேலை என்று தீர்மானிக்கப்படவில்லை.

தோட்டத்தொழிலாளரை தோட்ட நிறுவனங்களுடன் பேசி தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, அரசு கைகளைக் கழுவிக் கொள்ள முடியாது. பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா கிடைப்பது இல்லை என்று எவரும் முறையிடவில்லை என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகின்றார். ஆனால் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா முறையாக கிடைப்பது இல்லை என்பதே உண்மை- என்றார். (ஒ.4)



# சுற்றுச்சூழலுக்கு தீங்கு; 8 பொருள்களுக்கு தடை

கொழும்பு,ஓக.7

சுற்றுச்சூழலுக்கு தீங்கை ஏற்படுத்தும் மேலும் 8 பொருள்களை தடை செய்வது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். சுற்றாடல்துறை அமைச்சு சார் ஆலோசனைக் கூட்டம் தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உணவைப் பொதியிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்களை தடைசெய்யும் சட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இது தொடர்பான சுற்றிவளைப்புக்களை அதிகரிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

தற்போது பயன்படுத்தப்படும் முகக் கவசங்கள் உரிய முறையில் அகற்றப்படாமை காரணமாக சமூகத்தில் சுற்றாடல் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே சுட்டிக்காட்டினார். பயன்படுத்திய முகக் கவசங்களை உரிய முறையில் அகற்றுவது தொடர்பில் ஒழுங்கு விதி சுகாதார அமைச்சின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

அதேவேளை நாடு முழுவதிலுமுள்ள 103 கங்கைகளைப் பாதுகாப்பதற்கு 'கங்கைகளைப் பாதுகாப்போம்' தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பணிப்புரைக்கு அமைய ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் உள்ள பிரதான நகரங்களை உள்ளடக்கும் வகையில் சுற்றாடல் கணக்காய்வொன்று முன்னெடுப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது- என்றுள்ளது. (ஒ.4)

# போராட்டங்களை ஒடுக்க பொலிஸார் அடக்குமுறை

## லெனினிசக் கட்சி கண்டனம்

கொழும்பு.ஓக.7

மக்களின் உரிமைப் போராட்டங்களை நசுக்கி, ஒடுக்குவதற்கு அரசு தனது பொலிஸாரைக் கொண்டு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவிக்கையில்,


உயர் கல்வியைத் தனியார் மயப்படுத்தி ஒட்டு மொத்த இலவசக் கல்விக்கு வேட்டு வைக்கவும், அதே போன்று கல்வித் துறையை இராணுவமயப்படுத்தவுமே கொத்தலாவல பல்கலைக்கழகச் சட்டவரைவை நிறைவேற்ற முனைகின்றனர். அதேவேளை நீண்ட காலமாக நிலவும் ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வைக் கொண்டுவர ஆட்சியாளர்கள் விடாப்பிடியாக மறுத்து வருகின்றனர். இந்த நிலையில் விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள் வீதியில் இறங்கிப் போராடுகின்றனர். அவர்களைப் பொலிஸார் கைதுசெய்கின்றனர்.

ஜே.ஆர் தொடக்கி வைத்த தன்நபர், தனிக்கட்சி சர்வாதிகாரத்தை அதன் தொடர்ச்சியில் ராஜபக்சர்கள் தமது குடும்ப ஆட்சியாக முன்னெடுத்து வருகின்றனர். பதவிக்கு வருவதற்காக மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை வழங்கியதுடன், தேசிய இனங்களை பகைவர்களாகச் சித்தரித்தே கோத்தா மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்தது. ஆனால் நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றப் பெரும்பான்மையும் கிடைத்ததன் மூலம் தமது குடும்ப சர்வாதிகாரத்தை இராணுவமயப் படுத்தலுக்கு ஊடாக முன்னெடுப்பதிலேயே முனைப்புக் காட்டி வருகின்றனர்- என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அடுத்த வாரம் மோசமான கொரோனா அலை

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை



கொழும்பு,ஓக.7

**இலங்கையில் மின மோசமான கொரோனா அலையொன்று அடுத்த வாரமளவில் உருவாகலாம் என்று மருத்துத்துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

டெல்டா திரிபு வைரஸ் தொற்றானது கட்டுக்கடங்காத வகையில் பரவிச் செல்வதால், இந்தநிலை உருவாகும்.

மேல் மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகள் அனைத்தும் கொரோனாத் தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன. அவர்களின் அநேகமானவர்கள் சுவாச நோயுடன் தொடர்புடையவர்கள்.

இதனால் நோயாளர்களில் மூன்றில் இரண்டு பேருக்கு பிராணவ வாயு அவசியப்படும். எதிர்காலத்தில் அதிக தொற்றாளர்கள் மருத்துவமனைக்கு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளமையால், அவர்களுக்கான பிராணவாயு வழங்குவதில் சிரமங்கள் ஏற்படலாம்.

இந்த நிலை தொடருமாக இருந்தால் எதிர்வரும் மாதமளவில் டெல்டா திரிபு வைரஸ் காரணமாக இலங்கையின் மருத்துவத்துறை மிகவும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (ஒ.4)

# முதியோர் இல்லத்தில் அனைவருக்கும் தொற்று

கொழும்பு,ஓக.7

பிலியந்தலை முதியோர் இல்லத்தில் முதியோர் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 20 முதியவர்கள் மற்றும் 6 ஊழியர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவமனைகளில் இட நெரிசல் காரணமாக, நோயாளிகள் அதே முதியோர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பிரதேச மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். (ஒ.4)

# மஹாநாயக்க தேரரை சந்தித்தார் ஜனாதிபதி

கொழும்பு,ஓக.7

அமரபுர மஹா நிக்காயவின் புதிய மஹாநாயக்க தேரர் அக்கமகா பண்டித சங்கைக்குரிய தொடம்பஹல சந்தசிறி தேரரை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

சாசனத்துக்கும் சமய மற்றும் தேசிய ரீதியில் அமரபுர மஹா நிக்காய மேற்கொண்டுவரும் சேவைகளைப் பாராட்டிய ஜனாதிபதி, பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தன்னுடைய முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன் என்று தெரிவித்தார்.

அங்கு வைக்கப்பட்டிருந்த நினைவுப் பதிவேட்டில் விசேட குறிப்பொன்றையும் பதிவுசெய்தார்.

பின்னர் புனித தாது கோபுரத்துக்குச் சென்று சமயக் கிரியைகளில் ஈடுபட்டார்.

மஹா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து அவரை ஆசிர்வதித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ.4)

# தென்மராட்சியில் கொரோனா தீவிரம்

## இதுவரை அறுவர் உயிரிழப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றின் வேகம் அதிகரித்துள்ளது. இதுவரை அறுவர் உயிரிழந்துள்ளனர் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பணியகத்தினரால் எழுமாற்று மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களில் பெறப்பட்ட மாதிரிகளில் நேற்று வரை 464 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனைவிட சாவகச்சேரி மருத்துவமனையிலும் கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் அடையாளம் காணப்பட்டவர்கள், விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொற்றின் தாக்கம் அதிகம் காணப்படுபவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படுகின்றனர்.

மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதும் மிக அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ.4-9)



# பிரமந்தனாறு பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

கிளிநொச்சி,ஓக.7

கிளிநொச்சி பிரமந்தனாறு மயில்வாகனம் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தநிலையில்ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்தில் 5 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 200 துப்பாக்கி ரவைகள் மற்றும் 25 மூடைகளில் கட்டப்பட்ட பாவித்த துப்பாக்கி ரவை கூடுகள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம்தொடர்பில்மேலதிகவிசாரணைகளைபொலிஸார் மேற்கொண்டுவருவதுடன், சந்தேகநபர்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஜ-113)

# வடக்கில் அதிக காணிகள் இன்னமும் இராணுவவசம்

## விடுவிக்குமாறு வலியுறுத்து

கொழும்பு,ஓக.7

போர் முடிவடைந்து பல வருடங்கள் கழிந்தும் வடக்கு மாகாணத்தில் பொது மக்களின் அதிகமான காணிகள் இன்னமும் இராணுவத்தினர்வசமே உள்ளன. இந்தக் காணிகள் உரியவர்களுக்குக் கையளிக்கப்படவேண்டும். அது மாத்திரமல்லாது அவர்களுக்கு நஷ்டஈடும் வழங்க வேண்டும் என்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் ஏ. சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போரின்போது மனித உரிமை சட்டம் மற்றும் மனிதாபிமான சட்டம் மிக மோசமான முறையில் மீறப்பட்டுள்ளன.

இதுதொடர்பில்சுதந்திரமான விசாரணை மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைகளைமீறிச்செயற்பட்டவர்களுக்குஎதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவற்றை நான் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளேன்.

தமிழ் அரசியல் கைதிகள் பலர் மிக நீண்டகாலமாக சிறைகளில் இருந்து வருகின்றனர். அவர்கள் விடுதலை செய்ய வேண்டும்.

அதேபோன்று பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு அவசியமில்லாத சட்டமாகும். ஏனெனில், அதில் இருக்கும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நாட்டில் இருக்கும் நீதி முறைமைக்கு முரணாகும். அதனால் பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாமலாக்கப்பட்டு இலங்கையில் ஏற்கனவே இருக்கின்ற தண்டனைச்சட்ட கோவை, குற்றவியல் நடவடிக்கை கோவை மற்றும் சான்று கட்டளைச்சட்டம். ஆகியவற்றை ஒரு சட்டமைப்புக்கு கீழ் கொண்டுவர வேண்டும்.

பிணை வழங்க முடியாத குற்றங்களின் கீழ் ஒருவரைக் கைதுசெய்தால், அவரை நீண்டகாலத்துக்கு தடுத்து வைக்க முடியாது. ஒன்றில் அவருக்கு எதிரான வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும். அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட வேண்டும். அதேபோன்று நீதிமன்றங்களும் அவ்வாறான வழக்கு விசாரணைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் ஒரு இனத்துக்காகவோ அல்லது ஒரு சமூகத்தை இலக்கு வைத்தோ மேற்கொள்ளப்படும் வெறுப்பூட்டும் பேச்சுக்கள் தடைசெய்யப்படவேண்டும்.

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற சில வன்முறை சம்பவங்களுக்கு வெறுப்பூட்டும் பேச்சுக்களே பிரதான காரணமாக இருந்தன. அதேபோன்று மொழி உரிமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக தென்னிலங்கையில் சிங்கள மொழி மாத்திரம் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதனால் சிங்களம் தெரியாத தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. அதேபோன்று வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிமாத்திரம்பயன்படுத்தப்படுவதால், அந்தப் பிரதேசத்தில் இருக்கும் சிங்கள மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. அதனால் தமிழ், சிங்கள மொழியை நாட்டில் அனைத்து இடங்களிலும் பயன்படுத்துவதை கட்டாயமாக்க வேண்டும்.

அதேவேளை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது மிக முக்கியமானதாகும். நாட்டின் அபிவிருத்திக்கு இது அத்தியாவசியமானதாகும்.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, நல்லிணக்கம் இல்லாமல் நாட்டை அபிவிருத்திசெய்ய முடியாது. இதற்கு சமஷ்டி முறையிலான தீர்வே அவசியமாகும். ஆனாலும் இலங்கையைப் பொறுத்தமட்டில் அதற்கு தயாரான நிலையில் தென்னிலங்கை மக்கள் இல்லை. அதனால் தற்போதுள்ள நிலையில் அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். -என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் அதி தீவிரம்

கொழும்பு,ஓக.7

இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் மிகத் தீவிரமாகப் பரவிவருகின்றது என்று சப்ரகமுவ மாகாண தொற்றுநோய் மருத்துவப் பிரிவின் மருத்துவ நிபுணர் லக்மால் கோனார தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் இந்த வருடம் 344 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலைமை கொரோனாத் தொற்று சூழ்நிலைகளுக்கு மத்தியில் வேறு பல தாக்கங்களை ஏற்படுத்தலாம்.

இலங்கையில் எலிக்காய்ச்சல் தீவிரமாகப் பரவும் மாவட்டமாக இரத்தினபுரி மாவட்டம் காணப்படுகின்றது.

அதிலும் கடந்த ஐந்து வருடங்களாக இந்த நிலைமை நிலவி வருகின்றது. இந்த மாவட்டத்தின் 19 பொதுச் சுகாதார மருத்துவப் பிரிவுகளில் நிவித்திகல, பெல்மதுளை, கிரியெல்ல, கலவான, எலபாத்த ஆகிய பிரிவுகளிலேயே அதிக நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# பொதியில் பெண்ணின் சடலம் கடையில் துண்டாக்கப்பட்ட கொடூரம்



**மட்டக்களப்பு, ஓக.7**

**வாழைச்சேனை பொதுச்சந்தைப் பகுதியிலுள்ள வியாபார நிலையத்தில், உரப்பையில் பொதியிடப்பட்ட நிலையில், பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.**

குறித்த உரப்பை பொதியைக் கொண்டுவந்த நபர், பத்து நிமிடத்தில் எடுத்துக்கொள்கின்றேன் என்று கூறிவிட்டு தலைமறைவாகியுள்ளார். அவர் திரும்ப வராத காரணத்தால், வர்த்தக நிலைய உரிமையாளர் சந்தேகநபருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அதை வைத்துக்கொள்ளுங்கள் நான் வருகிறேன் என்று அவர் பதிலளித்துள்ளார்.

எனினும் பொதியில் சந்தேகம் கொண்ட வர்த்தக நிலைய உரிமையாளர் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கச்சென்றுள்ளார்.

அங்கு உரப்பையைக் கடையில் வைத்துச்சென்றவர் நின்றுள்ளார். வர்த்தக நிலைய உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

அதனையடுத்து சந்தேகநபரும், வர்த்தக நிலைய உரிமையாளரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

கொலைசெய்யப்பட்ட குடும்பப் பெண் வாழைச்சேனை அல்லாப்பிச்சை வீதியைச் சேர்ந்த முகம்மட் கனீபா சித்தி லைலா (55 வயது) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடம் சந்தேகநபர் நகையைப் பெற்று அடகு வைத்துள்ளார். பின்னர் நகையை மீட்டுத் தருகின்றேன் என்று தன்னுடன் அழைத்துச் சென்றுள்ளார். குறித்த பெண் மாலையாகியும் வீடு திரும்பாத நிலையில் குடும்பத்தினர் பொலிஸ் நிலையம் சென்றுள்ளனர்.

குறித்த பெண்ணை சந்தேகநபர் வளர்ப்பு மீன் கடைக்கு அழைத்துச் சென்று, அங்கு வைத்து கொலை செய்து, உரப்பையில் போட்டு முச்சக்கர வண்டியில் ஏற்றிச்சென்று சடலத்தை வாழைச்சேனையிலுள்ள நண்பனொருவரின் வளர்ப்பு மீன் கடையில் வைத்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4-150)



பொலிஸ் சேவைக்கு

# ஆள்சேர்ப்பு செய்வதற்கான இறுதி நேர்முகத்தேர்வு

வவுனியா,ஓக.7

இலங்கை பொலிஸ் சேவைக்கு (உப பொலிஸ் பரிசோதகர்) ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகத் தேர்வு வவுனியா மாவட்டச் செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த இறுதி நேர்முகத் தேர்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலாரும் என நூற்றுக்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே இவர்களுக்கான நேர்முகத்தேர்வுகள் கடந்த வருடம் நடைபெற்று அதன் பின்னர் உடற்தகுதிகாண் பரீட்சைகள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து இவர்களுக்கான இறுதி நேர்முகத் தேர்வே நேற்று நடைபெற்றது.

இந்தத் தேர்வில் 45 உப பொலிஸ் பரிசோதகர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் பொலிஸ் உயர் அதிகாரிகள், வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஆண், பெண் பரீட்சார்த்திகள் என இருபாலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# அடக்குமுறையை கையாளும் அரசு

ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.7

தற்போதைய அரசு அடக்குமுறையைக் கையாளுகின்றது.

இது பொலிஸ், இராணுவ ஆட்சியில் உருவாகும் ஒரு சர்வாதிகார வெறியாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிக்கையில்,

சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களைப் பார்வையிடச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குழுவினருக்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை. இது மிகவும் ஆபத்தான சூழ்நிலையாகும்.

நாடாளுமன்ற உறுப் [illegible] வரப்பிரசாதங்களின் பிரகாரம் எந்தவொரு பொது நிறுவனத்திலும் நுழைய வாய்ப்பளிக்கப்பட வேண்டும். மேலும், சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்லது சிறையில் இருக்கும் எவரையும் சந்திக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் நாடாளுமன்ற உறுப்பினரின் சலுகைகளையும், அடிப்படை உரிமைகளையும் மீறுவதாகும். அவர்கள் கைதுசெய்யப்பட்ட சமயத்தில், சட்டத்தரணிகளைச் சந்திக்கக்கூட பொலிஸார் அனுமதிக்கவில்லை. இது நாட்டின் அடிப்படைச் சட்டத்தின் கடுமையான மீறலாகும்.

அரசு நாட்டில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுச் செயற்படுத்து [illegible] மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. -என்றார். (4)




# 212 அம்புயூலன்ஸ் இன்னமும் தேவை

கொழும்பு,ஓக.7

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள கொரோனா நெருக்கடியைச் சமாளிக்க, 212 நோயாளர் காவு வண்டிகள் தேவைப்படுகின்றன. என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாடாளுமன்றில் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்கான குறைநிரப்பு பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இத்னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனாத் தொற்று ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தொற்றாளர்களை மருத்துவமனைகளுக்கும், இடைத்தங்கல் நிலையங்களுக்கும் கொண்டுசெல்ல, 1990 என்ற நோயாளர் காவு வண்டி சேவையே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது இந்தச் சேவையில் 297 வண்டிகள் உள்ளன. இவை நாட்டின் தற்போதைய நிலைமைக்குப் போதுமானதாக இல்லை. அதனால் மேலும் வண்டிகள் தேவை. சுமார் 60 வண்டிகளை கொவிட் நிதியத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அதேவேளை மேலும் பல தேவைகளுக்காக நிதியை நாடாளுமன்றில் கோரி இருக்கின்றோம். -என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிலிருந்து மேலும் 2 மில்லியன் தடுப்பூசிகள்




கொழும்பு,ஓக.7

சீனாவிலிருந்து மேலும் 2 மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் நேற்றுக் காலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான இரு விமானங்களினூடாக இவை எடுத்து வரப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் தடுப்பூசிகளுடன் சிறிலங்கன் ஏயர்லைன்ஸின் விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. பின்னர் மேலும் ஒரு மில்லியன் தடுப்பூசிகளுடன் மற்றொரு சிறிலங்கன் விமானம் பீஜிங்கிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. அதேவேளை இந்தத் தடுப்பூசியின் மற்றொரு தொகுதி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ஓ.4)

# பதுக்கப்படும் நெல் அரசுடமையாக்கப்படும்

## அரசு அறிவிப்பு



கொழும்பு,ஓக.7

**இடைத்தரகர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நெல்லை அரசுடமையாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசியின் நிர்ணய விலையை தொடர்ந்து பேணுவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் நெல் ஆலை உரிமையாளர் ஆகியோருக்கு புறம்பாக நெல்லைப் பதுக்கி வைத்துள்ள இடைத்தரகர்கள் வசமுள்ள நெல்லை அரசுடமையாக்குவதற்கும், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தேவையான சட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளன.

அரசி விலை அதிகரிக்கக்கூடும் என்று கருதி நெல்லைப் பதுக்கி வைத்துள்ளனர்.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் தற்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வாடிக்கையாளர் மற்றும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நிர்ணய விலைக்கு மேலதிகமாக அரிசியை விற்பனைசெய்யும் வியாபாரிகளுக்கு எதிராக இதுவரையில் அறவிடப்பட்ட தண்டப்பணத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதேவேளை தற்போது நடைமுறையில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்தியமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உத்தரவாத விலைக்கு மேலதிகமாக பொருள்களை விற்பனை செய்யும் போது அறவிடப்படும் தண்டப் பணத்தை அதிகரிக்கும் திருத்த யோசனைக்கு முன்னுரிமை வழங்கி, அதனை எதிர்வரும் மாதத்துக்குள் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளோம். -என்றார். (ஓ.4)

# வன ஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகள் மீது தாக்குதல்

இராணுவ அதிகாரிக்கு நீதிமன்றின் உத்தரவு



கொழும்பு,ஓக.7

மின்னேரியா ஹபரனை தேசிய வன விலங்குகள் பூங்காவில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்து தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தின் 21 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மொஹான் ரத்நாயக்கவை, நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கெக்கிராவை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், கெக்கிராவை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள முறைப்பாடு நேற்று முன்தினம் மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே நீதிமன்று இந்த உத்தரவை பிறப்பித்தது.

முன்னதாக ஹபரனை தேசிய வன விலங்குகள் பூங்காவின் ஒரு பகுதியில், சட்டவிரோதமாக யானைக் குட்டியொன்றைப் பிடிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று வன ஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. சந்தேகத்துக்கு இடமான முறையில் வனப்பகுதியிலிருந்து சென்ற இராணுவ வாகனங்கள் இரண்டை நிறுத்த முயன்றபோது, வன ஜீவராசிகள் பாதுகாப்பு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டளைத் தளபதி ஜூலை மாதம் முதலாம் ஆம் திகதி ஹபரனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரைப் பிணையில் விடுவித்த நீதிமன்று வழக்கை, அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

இவ்வாறான நிலையில், இந்த விவகாரத்தில் வன ஜீவராசிகள் திணைக்களம் மன்றில் முன்வைத்துள்ள முறைப்பாடு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அது தொடர்பிலேயே செப்ரெம்பர் 2 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதிமன்று உத்தரவிடப்பட்டுள்ளது. (ஓ.4)

# அதிபர்,ஆசிரியர்களின் போராட்டத்துக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவை ஆதரவு

வவுனியா,ஓக.7

அதிபர்,ஆசிரியர்களின் போராட்டத்துக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவையும் தனது ஆதரவை வழங்கியுள்ளது.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து நாட்டில் பல இடங்களிலும் ஆசியர் சங்கங்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அவர்களின் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகிறோம் என சர்வதேச இந்து இளைஞர் பேரவைத் தலைவர் சிவஸ்ரீ ஜெ.மயூரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

நாட்டில் உள்ள அனைத்து துறைகளையும் சார்ந்த அத்தனை அதிகாரிகளையும், அறிஞர்களையும் உருவாக்கியவர்கள் இவ்வாசிரியர்களே. எனவே அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய கடமை அனைவருக்கும் இருக்கின்றது.

சமூகத்திலே பார்வையாளர்களாகவே மட்டும் இருப்பதால் எதுவும் கிடைக்கப்போவதில்லை பங்காளர்களாக மாறுங்கள். பார்வையாளர்களாக சமூகத்தில் இருக்கும் வரை நாம் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது பங்காளர்களாக மாறும் போது நாம் எமக்கான தேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இன்று ஆசிரியர்கள் தமக்காக மட்டுமல்ல அனைத்து துறைசார்ந்தவர்களுக்குமாகவே போராடிக்கொண்டிருக்கின்றனர் என்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே அவர்களது போராட்டம் வெற்றிபெறும் வரை எமது ஆதரவு அவர்களுக்கு தொடர்ந்தும் இருக்கும் என்றுள்ளது. (ஜ-110)

# யானைகள் அட்டகாசம்: வாழ்வாதாரம் பாதிப்பு



வவுனியா,ஓக.7

வவுனியா மாவட்டத்தில் உள்ள சின்னத்தம்பனை கிராமத்தில் அதிகரித்துள்ள யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்துத் தெரிவித்ததாவது;

சின்னத்தம்பனை கிராமத்தில் மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்த யானைகள் வாழைகள், தென்னம்பிள்ளைகள், மரவள்ளி மற்றும் பலாமரம் போன்ற பயன்தரும் மரங்களை முறித்து சேதப்படுத்தியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பாரம்பரிய கிராமங்களில் ஒன்றான சின்னத்தம்பனை விவசாயக் கிராமத்தில் கடந்த பல வருடங்களாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ள நிலையில். தற்போதும் யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் வந்து பயன்தரும் மரங்களையும், விவசாய நிலங்களையும் சேதப்படுத்தி வருகின்றன.

கிராமத்தை யானைகள் ஆக்கிரமித்து வருவதால் சொந்த கிராமத்தில் இருந்து வேறு இடங்களுக்கு இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பகுதியில் யானை வேலி அமைக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றனர். (ஜ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாளிக் கூத்து!

அரச பணியாளர்கள் அனைவரையும் பணிக்கு அழைத்து வெறும் மூன்றே நாள்களில் அந்த முடிவை மறுபரிசீலனை செய்துள்ளது கோத்தாபய அரசு. கொரோனாத் தொற்று மீண்டும் தீவிரமானதை அடுத்து இரு கட்டங்களாக இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு மாத்திரம் அவர்களைப் பணிக்கு அழைக்கும் வகையில் புதிய சுகாதார வழிகாட்டல் பொறிமுறைகள் தயாரிக்கப்படவுள்ளன. மாகாணப் போக்குவரத்திலும்கூட சில இறுக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படலாம் என்றும் கருதப்படுகின்றது. இந்த முன்பின் முரண் நகர்வுகளெல்லாம் அரசின் கையாலாகாத தனத்தையும் முதிர்ச்சியற்ற தன்மையையும்தான் காட்டுகின்றதே தவிர வேறொன்றும் இல்லை.


கொரோனாத் தொற்று தீவிரமாகப் பரவி வருகின்றது. அரச பணியாளர்களை வேலைக்கு அழைக்க வேண்டாம், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் தடையை இறுக்கமாக நடைமுறைப்படுத்துங்கள் என்று சுகாதாரத் துறையினர் கடும் எச்சரிக்கை விடுத்தபோதிலும் அதையெல்லாம் சட்டை செய்யாமலிருந்த அரசுக்கு விழுந்த சம்மட்டி அடிதான் இந்த நெருக்கடி. ஒரு தளர்வு நடவடிக்கை அறிவிக்கப்பட்டு மூன்றே நாள்களில் அந்த நடவடிக்கை கைவிடப்படுகின்றதென்றால் எந்த அடிப்படையில் என்னென்ன புள்ளிவிவரங்களை வைத்து இந்தத் தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அரசு முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

கொரோனா ஒன்றும் மர்மமான விடயமோ அல்லது கொரோனாவால் பாதிக்கப்பட்ட முதலாவதும் ஒரேயொரு நாடும் இலங்கையோ அல்ல. ஐரோப்பிய நாடுகளில்கூட தளர்வுகளின் பின்னர் கொவிட் தீவிர வேகம் கொண்டமை பதிவுகள். ஆக, எமக்கு முன்னால் ஏகப்பட்ட கற்பிதங்கள் மற்றும் உதாரணங்கள் உள்ளன. அவற்றை ஒப்புநோக்கி நாட்டின் பாதுகாப்பை சுயபரிசீலனை செய்ய முடியாதவர்களாகக்கூட எம் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர் என்பது உண்மையில் வெட்கக்கேடான விடயம்தான்.

மக்கள் பொறுப்பற்று நடப்பதால்தான் இந்த நெருக்கடி என்று பொத்தம்பொதுவாக ஒரு மழுப்பல் பதிலைச் சொல்லித் தப்பித்துவிட முடியாது. நாட்டை முடக்கும்படி துறைசார் வல்லுநர்கள் எத்தனையோ எச்சரிக்கைகளை விடுத்தனர். அப்போதே நாடு முடக்கப்பட்டிருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்பது மட்டும் உண்மையிலும் உண்மை. மக்கள் ஒன்றுகூடக் கூடிய ஏதுநிலைகள் அரசால்தான் ஏற்படுத்தப்பட்டன. மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்தை அனுமதித்து டெல்டா பரவல் அபாயத்தை இன்று ஒட்டுமொத்த நாடும் எதிர்கொண்டிருக்கின்றது என்றால் அதற்கும் அரசுதான் பொறுப்பு.

திறைசேரியின் இருப்பைத் தக்கவைப்பதற்காக கொவிட் தொற்றுக்கு மத்தியில் சில தளர்வுகளை அறிவித்து அதன் பரவலை தீவிரமாக்கி நாட்டையும் மக்களையும் இத்தகைய ஒரு பெரும் நெருக்கடிக்குள் தள்ளியது பொறிமுறையற்ற – முதிர்ச்சியற்ற ஆட்சிதான் என்றால் அதற்கு இரண்டாம் கருத்து இருக்க முடியாது.

மக்களாட்சிக்கும் மக்கள் நலத் திட்டங்களுக்கும் இராணுவச் சித்தாந்தம் ஒருபோதும் தீர்வாகாது. இராணுவச் சித்தாந்தத்தை மூலமாக வைத்து அனைத்தையும் அணுகிவிடலாம் என்றால் அங்கே கோமாளிக் கூத்துத்தான் அரங்கேறும். கொரோனா ஒன்றும் மழையல்ல, வானம் வெளித்த பின்னர் துணி காயப்போடுவதற்கும் போக்குவரத்துக்களை மேற்கொள்வதற்கும். நீண்ட பொறிமுறையும், நுணுக்கமான அவதானிப்பும், உச்சக்கட்ட விழிப்புணர்வுமே அதை வெல்வதற்கு ஒரே வழி. புரியட்டும், தெளியட்டும்.



# தடுப்பூசிகளின் தரம் தொடர்ந்தும் ஆய்வு

## சான்றிதழ் வழங்கமுடியாது என்கிறார் சுகாதார அமைச்சர்

**கொழும்பு,ஓக.7**

**இலங்கையில் பயன்படுத்தப்படும் கொரோனாத் தடுப்பூசிகளின் தரம் தொடர்பில் இறுதியாக்கப்பட்ட தரவுகள் என எதுவுமே இல்லை. தற்போதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அது தொடர்பில் உறுதியான தகவல்களை வழங்க முடியாது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு அவர் மேலும் பதிலளிக்கையில்,

கடந்த வாரத்தில் தெற்காசிய வலயத்தில் மீண்டும் கொரோனாத் தொற்றுப்பரவல் அதிகரிப்பு நிலையொன்றே காணப்படுகின்றது. அதேபோல் இலங்கையிலும் வைரஸ் தொற்றாளர் அதிகரிப்பை காட்டுகின்றது. மீண்டும் இரண்டாயிரத்தைத் தாண்டிய தொற்றாளர்கள் நாளாந்தம் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

ஆனால் எப்போது இன்னொரு வைரஸ் அலை உருவாகும் என்று கூறமுடியாது. தடுப்பூசி ஏற்றிக்கொள்வதன் மூலமாக மட்டுமே கொரோனா அலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

சகலவிதமான கொவிட் வைரஸ்க்களுக்கும், தற்போது நாம் பயன்படுத்தும் சகல தடுப்பூசிகளும் வெற்றிகரமாக செயற்படுகின்றது என்பதை சுகாதார நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அது மட்டுமல்ல நாட்டில் தற்போது நாம் தளர்வுகளை கையாண்டுள்ளோம் என்பதற்காக சுகாதார வழிமுறைகளையும் தளர்த்தியுள்ளோம் என்று அர்த்தப்படாது. தொடர்ந்தும் மக்கள் சுகாதார வழிமுறைகளைக் கையாண்டு பாதுகாப்புகளை உறுதிப்படுத்த வேண்டும்- என்றார். (ஒ.4)

# இரசாயன உரப்பாவனை தடையில் எவ்வித மாற்றமும் இல்லை

## ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.7

விஞ்ஞான ரீதியிலான அம்சங்களின் அடிப்படையில், சில தீர்மானங்களை மேற்கொண்ட போதும் இரசாயன உரப்பாவனை குறித்த அரச கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை என்று ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

“இரசாயன உரத் தடை நீக்கப்பட்டதா’ என்ற தலைப்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல தசாப்தங்களாக இரசாயன உரப்பாவனைக்கு பழக்கப்பட்டுள்ள ஒரு நாட்டை சேதனப்பசளை பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது சவாலான விடயம்தான். இவ்வாறான நிலையில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுவது இயல்பானதே- என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த விவசாயத் துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வா, மண் பரிசீலனையைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறியீட்டின் அடிப்படையில் அந்தந்த பிரதேசங்களுக்குத் தேவையான அளவில் சேதனப்பசளையை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான மண் பரிசீலனை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹிசாலினி இறப்பு விவகாரம் விசாரணைக்கு ஒத்துழைப்பேன்

## ரிஷாத் தெரிவிப்பு



**கொழும்பு,ஓக.7**

**சிறுமி ஹிஷாலினியின் உயிரிழப்புத் தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும். அதற்கு எனது ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றேன் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குறைநிரப்பு பிரேரணை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னை அநியாயமாக 102 நாள்களாக தடுத்து வைத்துள்ளனர். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எனது வீட்டில் பணியாற்றிய ஹிஷாலினி தீ மூட்டி உயிரிழந்த சம்பவம் எனக்கும், எனது குடுத்தினருக்கும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

எனது வீட்டில் ஒரு தனிநபர் வாழக்கூடிய சகல அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றோம். அந்த அறையில் தான் கடந்த 10 வருடங்களாக அங்கு பணிபுரிந்தவர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். எனது குடும்பத்தில் இவ்வாறான சம்பம் ஒன்று இடம்பெற்றால் எவ்வாறு நாங்கள் செயற்படுகின்றோமோ அதேபோன்று அந்த சிறுமியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல எனது வயதுபோன மாமனாரும், மாமியாரும் முழு மூச்சாக செயற்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் எனது மனைவிக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் அவர் உனடியாக மருத்துவமனைக்குச் சென்றிருக்கின்றார். அவர் உயிர் பிழைப்பதற்காக எனது குடும்பத்தினர் தொடர்ந்து நோன்புப் பிராத்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தரகருக்கு தெரியப்படுத்தி, தாயாரை உடனடியாக வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறுமியின் உயிரைப் பாதுகாக்க 7 தொடக்கம் 10 லட்சம் ரூபா வரை செலவாகும். பிளாஸ்டிக் (சேர்ஜரி) சத்திரசிகிச்சை மேற்கொள்ள தேவையான தோல் சிங்கப்பூரில் இருந்து கொண்டுவரவேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கான செலவை வழங்குகின்றேன் என்று எனது மனைவி மருத்துவர்களுக்கு தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது நான் வீட்டில் இருக்கவில்லை. அவரை எமது பிள்ளைபோலவே எனது மனைவி மற்றும் மாமியார் பரிமாரித்தனர்.

எனது வீட்டிலே எந்தவிதமான அசிங்கமான விடயமும் இடம்பெறவில்லை. எனவே அவரது இறப்புத் தொடர்பில் தூய்மையான, சுதந்திரமான விசாரணை இடம்பெற வேண்டும்.

இந்த சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு எனது குடும்பத்தில் அனைவரும் தற்போது சிறையில் உள்ளனர். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தராதரம் பார்க்காமல் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். என்றார். (ஒ.4)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி,ஒக.7

பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில், மோட்டார் கைச்கிளில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த 47 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஐ-9)

# கொத்தலாவல சட்டவரைவை முழுமையாக நீக்கவேண்டும்

## ஹரினி அமரசூரிய வலியுறுத்து

கொழும்பு,ஓக.7

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்ட வரைவில் ஒரு சில திருத்தங்களை மேற்கொள்வதால் மாத்திரம் இலவசக் கல்விக்கு ஏற்படப்போகும் பாதிப்பை நிவர்த்திசெய்ய முடியாது. எனவே அதனை முழுமையாக நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த சட்ட வரைவை நிறைவேற்றுவதில் தற்போது அரசுக்கு சிக்கல் நிலை தோற்றம் பெற்றுள்ளது. ஆளும் கட்சியின் பங்காளித் தரப்பினர்கள் இந்த சட்டவரைவில் கொண்டுவரவேண்டிய திருத்தம் தொடர்பில் தங்களின் கட்சி மட்டத்தில் யோசனை முன்வைத்துள்ளனர்.

இலவச கல்விக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவில் ஒரு சில விடயங்களில் மாத்திரம் திருத்தம் மேற்கொண்டால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடாது. சட்ட வரைவு திருத்தம் செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வரப்படும் என்று குறிப்பிடுவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. -என்றார். (ஒ.4)

# பொறுப்பற்ற அரசால் மக்களே நடுவீதியில்

## மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.7

அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளால், இன்று கொரோனாத் தாக்கத்துக்கு மத்தியிலும் மக்கள் நடுவீதியில் போராட வேண்டியுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிபர், ஆசிரியர்கள் வீதிக்கு இறங்கிப் போராடும் நெருக்கடியான சூழ்நிலையை அரசு தோற்றுவித்துள்ளது. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவை நீக்கி, ஆசிரியர், அதிபர் சம்பள பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை வழங்கியிருந்தால் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.

கொரோனாத் தாக்கத்தால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆசிரியர், அதிபர் சேவையில் சம்பளம் அதிகரிக்க முடியாது. என்று அரசு குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

பொருளாதார நெருக்கடி என்று குறிப்பிடும்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுகளின் வரப்பிரசாதங்களுக்கும், அரசின் தேவையற்ற செலவுகளுக்கும் குறையேதும் ஏற்படவில்லை.

வாழ்க்கைச் செலவுகள் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் உள்ளன. மறுபுறம் நிகழ்நிலை முறைமை ஊடான கற்பித்தல் முறைமைக்கு எவ்வித வசதிகளையும் ஆசிரியர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. மாணவர்களின் நலன்கருதியே ஆசிரியர்கள் ஆரம்பத்தில் தன்னிச்சையாக நிகழ்நிலை முறைமை ஊடாக கற்பித்தலில் ஈடுபட்டனர்.

ஆனால் தத்தமது அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டின் காரணமாக நிகழ்நிலை முறைமை ஊடான கற்பித்தலில் இருந்து அவர்கள் விலகியுள்ளனர். -என்றார். (ஒ.4)



# அனைத்துக் கிராமங்களிலும் சிறுவர்களுக்கு பாதுகாப்பு

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஓக.7

சிறுவர்களின் பாதுகாப்பை கிராமங்கள் தோறும் பலப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களின் விபரங்கள், கிராம அதிகாரிகளிடம் உள்ளன. வீடொன்றில் பிள்ளை ஒருவர் இல்லாமல் போவது பற்றி கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில், உடனடியாகச் செயற்பட்டு சிறுவர் [illegible] வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

வேறு நாடுகளில் சிறுவர் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிகளைக் கொண்டு, நகர மற்றும் கிராமிய மட்டத்தில் அந்த முறைமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள வாய்ப்புகளையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைக் கல்விகள் அனைத்துப் பிள்ளைகளுக்கும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும். சிறுவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பாதிருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அவற்றுக்குத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். போதைப்பொருள்களுக்கு அடிமைப்பட்டுள்ள பிள்ளைகளை அவற்றிலிருந்து [illegible] வேண்டுமென்பதுடன், அதனுடன் இணைந்ததாக அவர்கள் அதற்காகத் தூண்டப்படக்கூடிய காரணிகளைக் கண்டறிந்து, உரிய தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையை வெளியிடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சிறுமிக்காக வீடொன்றை நிர்மாணித்துக் கொடுக்கவும், அவரது குடும்பத்தின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும், இரண்டு சகோதரிகளுக்கும் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். -என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரில் தொற்றாளர்கள் அதிகரிப்பு

# பொதுமக்கள் எதிர்த்தாலும் கட்டுப்பாட்டை இறுக்குங்கள்

## துறைசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் தீர்மானம்



**மன்னார், ஒக.7**
**தொற்றாளர் தொகை அதிகரிப்பதால் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக்கும்போது மக்கள் அதிகாரிகளுடன் முரண்படும் நிலை ஏற்பட்டாலும், அதிகாரிகள் அவற்றை பொறுத்துக்கொண்டு மக்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.**

இவ்வாறு மன்னாரில் நடைபெற்ற கொரோனாத் தொற்று நோய் தொடர்பான கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நாங்கள் யாவரும் ஒத்துழைத்து மன்னார் மாவட்டத்தை இந்த கொரோனா தாக்கத்திலிருந்து மிகவும் கட்டுப்பாட்டுடன் வைத்திருந்தோம். ஆனால் அது தற்போது கைநழுவி கொரோனாத் தொற்று மன்னாரில் அதிகரிக்க தொடங்கியுள்ளது.

ஆகவே நாம் இப்பொழுது கொரோனா சம்பந்தமான சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

குறிப்பாக பொது இடங்கள், போக்குவரத்து மற்றும் மத ஸ்தானங்களில் மக்களின் சுகாதார நடைமுறைகளில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்களுக்கு நாம் வலியுறுத்தி உள்ளோம். அதிகாரிகள் இவ்வாறான தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கும்போது மக்கள் அதிகாரிகளுடன் முரண்படும் நிலையும் ஏற்படலாம். அவ்வாறு இருந்தாலும் அதிகாரிகள் அவற்றை பொறுத்துக் கொண்டு மும்முரமாக செயற்பாட்டில் இறங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை எவ்வளவுக்கு எவ்வளவு காப்பாற்ற வேண்டுமோ அந்தளவுக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இக் கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்பட்டது. -என்றார். (ஐ-60)

# தென்மராட்சி பிரதேசத்தில் 11 பேருக்கு கொவிட் தொற்று

சாவகச்சேரி,ஓக.7
தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த இரு தினங்களில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை தனிமைப்படுத்தலில் இருந்த 10 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவர்களில் நாவற்குழியைச் சேர்ந்த இருவர், அல்லாரை, கோயிற்குடியிருப்பு மற்றும் கல்வயல் ஆகிய பிரிவுகளில் தலா ஒருவருக்குமாக 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி மருத்துவமனையில் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் சிகிச்சை பெற வந்திருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 5 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட
அன்டிஜென் பரிசோதனையில் சரசாலைப் பகுதியில் தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது. (ஐ-9)

# திட்டமிட்டபடி தடுப்பூசி கிடைக்கும்

## சீனா அறிவிப்பு




கொழும்பு,ஓக.7
உள்நாட்டில் தடுப்பூசிகளின் தேவை அதிகரித்துள்ள போதிலும், முன்னதாக திட்டமிட்டபடி இலங்கைக்கு மேலும் நான்கு மில்லியன் தடுப்பூசிகள் இந்த வாரம் வழங்கப்படும் என்று சீனா அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளில் 72 வீதமானவை சைனோஃபோர்ம் தடுப்பூசிகளாகும்.

கடந்த மார்ச் 31 ஆம் திகதியன்று 6 லட்சம் தடுப்பூசிகளும், மே மாதம் 26 ஆம் திகதியன்று 5 லட்சம் தடுப்பூசிளும், கடந்த மாதம் இறுதிப் பகுதியில் 16 லட்சம் தடுப்பூசிகளும் உட்பட மொத்தமாக 27 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு அன்பளிப்புச்செய்யப்பட்டன.

தற்போது சீனாவில் சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனால் உள்நாட்டில் தடுப்பூசிகளின் தேவை அதிகரித்துள்ள போதிலும், முன்னதாகத் திட்டமிட்டபடி இலங்கைக்கு தடுப்பூசி வழங்கப்படும் என்று தூதரகம் தெரிவித்துள்ளது. (ஒ,4)

# போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட பதுங்குகுழிகளை அகற்றவும்

## மீளக் குடியமர்ந்த மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு,ஒக.7
போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள், பதுங்கு குழிகள் முழுமையாக மூடப்படாததன் காரணமாக மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் மாத்தளன், அம்பலவன் பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்கள் பாதுகாப்பு வலயங்களாக விளங்கியபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் இப் பகுதிகளில் தஞ்சம் அடைந்திருந்தனர்.

இக்காலத்தில் அமைக்கப்பட்ட பதுங்குகுழிகளும், மண் அணைகளும் முழுமையாக அகற்றப்படாமல் உள்ளன.

தென்னை மரங்கள் உள்ளிட்ட பயிர்ச் செய்கைக்காக நிலங்களை தயார் படுத்த முடியாமல் இவை தடையாகவுள்ளன.

அத்துடன் பதுங்குகுழிகளில் காட்டு விலங்குகள் மற்றும் பாம்புகள் உறைந்திருப்பதால் அச்சத்துடன் வீடுகளில் இருக்கவேண்டியுள்ளது.

மண் அணைகள் காரணமாக மழை காலத்தில் இயல்பாக வழிந்தோடும் வெள்ளம் தற்போது மக்கள் குடியிருப்புகளில் தேங்கி நிற்கின்றன. இதனால் குறித்த கிராமங்களைச் சேர்ந்த 450 வரையான குடும்பங்கள் தொற்று நோயால் பாதிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டபோதிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. -என்றனர். (ஐ-13)

# கடவுச்சீட்டு வழங்கல் நிறுத்தம்

கொழும்பு,ஓக.7
சாதாரண சேவையின் கீழ் கடவுச்சீட்டு வழங்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்தெரிவித்துள்ளது.

கொழும்பு பத்தரமுல்லவில் அமைந்துள்ள திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய தேவைகளைக் கொண்ட தனிநபர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு ஒரு நாள் சேவையின் கீழ் வழங்கப்படும். அதற்காக குறைந்த அளவிலான ஊழியர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ,4)

# கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா,ஒக.7
இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் உப பொருளாளராக தெரிவுசெய்யப்பட்ட வவுனியா உதைபந்தாட்ட சங்கத் தலைவர் நாகராஜன் கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கான கௌரவிப்பு நிகழ்வு வவுனியா வைரவ புளியங்குளத்தில் அமைந்துள்ள ரெலோ அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது உப பொருளாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ள நாகராஜனுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுப்பரிசில் வழங்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம், மாவட்ட அமைப்பாளர் புறுஸ், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ. மயூரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# 13 குடும்பங்களுக்கு அடைப்பொறி வழங்கல்

புங்குடுதீவு,ஒக.7
புங்குடுதீவைச் சேர்ந்த 13 குடும்பங்களின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக கோழிக்குஞ்சு அடைப்பொறிகள் வழங்கப்பட்டன.

தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்துறை தொகுதி செயலாளரும் , வேலணை பிரதேச சபை உறுப்பினருமான கருணாகரன் நாவலனின் 60 ஆயிரம் ரூபா பெறுமதியில் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் தீவகம் தெற்கு உதவி பிரதேச செயலர் நடராஜா பிரணவன், சமூக செயற்பாட்டாளர் சுப்பிரமணியம் கருணாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வீட்டுத்திட்ட விவகாரம்:

# மாவட்டச் செயலரின் பதிலும் 'உதயனின்' விளக்கமும்

04.08.2021 திகதியன்று வெளியான "உதயன்" பத்திரிகையில் "பொறுப்பேற்பது யார்?" என்ற ஆசிரிய தலையங்கத்தில் வெளியிடப்பட்ட "யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள" வீட்டுத்திட்டத்தில் "பெரும் முறைகேடுகள்" மாவட்டச் செயலகத்தால் இடம்பெற்றிருக்கின்றது என்ற சாரப்பட எழுதியிருப்பது தொடர்பாக மாவட்டச் செயலாளர் என்ற வகையில் பின்வரும் விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன்

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சுமார் 23,000 வீடுகள் தேவையாகும் எனினும் 2021 ம் ஆண்டு மேற்படி வீட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட வீடுகளினுடைய எண்ணிக்கை ரூபா 1,000,000.00 பெறுமதியான வீடுகள் 1532 உம், ரூபா 600,000.00 பெறுமதியான வீடுகள் 600 உம் ஆகும். இது தொடர்பில் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை, மற்றும் கட்டடப்பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் SMRHC/RD/04/01/01 இலக்க 2021.03.05 ஆம் திகதிய மற்றும் SMRHC/RD/04/01 இலக்க 2021.04.29 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் பயனாளிகள் தெரிவு தொடர்பில் அறிவுறுத்தல்களும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டிருந்தன. இதற்கமைய பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராமியக் குழுக்கள் ஊடாகவே பயனாளிகள் தெரிவு நடைமுறை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய, இதற்குரிய பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு பிரதேச செயலாளர்களால் சிபாரிசு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் மாவட்டச் செயலாளரினால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களுக்கு அனுப்பப்பட்டதுடன் அவர்களின் தழுவு அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இராஜாங்க அமைச்சின் SMRHC/RD/04/01 இலக்க 2021.04.29 ஆம் திகதிய கடிதத்தின் படி, பட்டியல்களை மீளச்செவ்வை பார்த்து தகுதியானவர்களை முன்னுரிமைப்படுத்தி அனுப்பும்படி கோரப்பட்டதற்கமைய எனது JF/RES/Housing/1/01/2021 இலக்க 29.04.2021, 11.05.2021 மற்றும் 03.07.2021 திகதிய கடிதங்களின்படி தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலை மீளவும் காட்சிப்படுத்தி முன்னுரிமைப்படுத்தி அனுப்பிவைக்கும்படி பிரதேச செயலாளர்கள் கேட்கப்பட்டிருந்தனர். பிரதேச செயலாளர்கள் "வீட்டுக்கு தகுதியான வர்களை" மீள்பரிசீலனை செய்து உரிய காரணங்களுடன் முன்னுரிமைப்படுத்தி சிபாரிசு செய்து சமர்ப்பித்துள்ள பட்டியலே இறுதிப் பட்டியலாக கொள்ளப்படவுள்ளது.

பயனாளிகள் தெரிவானது, அவர்கள் வெளிப்படுத்தும் தகவல்கள் அடிப்படையிலேயே புள்ளியிடலின் மூலம் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றது. தகுதியான பயனாளிகளுள்ளேயே அதாவது தங்களால் குறிப்பிடப்பட்ட 304 பயனாளிகள் அடங்கலாக முன்னுரிமைப்படுத்தப்பட்டனரே தவிர வீட்டுக்கு "தகுதியற்ற தவறான பயனாளிகள்" என்று எவரும் இல்லை .

மேற்படி 304 பயனாளிகளும் முன்னுரிமைப்பட்டியல் ஒழுங்கின்படி தகுதியானவர்களேயாயினும் அவர்கள் இவ்வருட வீட்டுத்திட்டத் துள் உள்வாங்கப்படவில்லை எதிர்காலத்தில் அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படலாம்.

அதேபோன்று தற்போது முன்னுரிமைப்பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளவர்களும் கடந்தகாலத்தில் வீடுகள் வழங்கப்பட்டபோது தகுதியிருந்தும் கடந்த காலத்தில் உள்வாங்கப்படாதவர்களாகும். மேலும் தங்களால் குறிப்பிடப்பட்ட இவ்வருடத்துக்கான வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்படாதவர்களாகிய 304 குடும்பங்களும் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாமைக்கு பின்வரும் காரணங்களை பிரதேச செயலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1. சில பயனாளிகளின் வெளிப்படுத்தல்களில் உள்ள தவறுகள் தெரியவந்தமை.
2. சிலபயனாளிகள்ரூபா600,000.00 பெறுமதியான வீட்டுக்குப்பதிலாக ரூபா 1,000,000.00 பெறுமதியான வீடு தேவை என சுயமாக விலகியமை
3. பட்டியலில் பின்னுரிமையில் உள்ளவர்கள் உரிய ஆவணங்களை காலதாமதமாக சமர்ப்பித்தமையால் பின்னர் அவர்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டனர்.
4. சில பிரதேச செயலர் பிரிவுகளில் பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களுக்கு முன்னுரிமைபடுத்தப்பட்டிருந்தமை மாற்றியமைக்கப்பட்டு இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு முன்னுரிமைபடுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறிருக்கும்போது, இச்செயற்றிட்டத்தில் பல்வேறு தரப்பினரும் இணைந்து செயற்படுகையில் தனியே யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தையும் மாவட்டச் செயலாளரையும் மாத்திரம் பொறுப்பாக குறிப்பிட்டு மாவட்டச் செயலகத்தால் வீட்டுத்திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்ற சாரப்பட எழுதியிருப்பது புனைவானதும் பொய்யானதுமாகும் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், இச்செய்தியானது மக்களை தவறான வழிக்கு இட்டுச் செல்வதாக வேண்டுமென்றே புனையப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.

மேலும் இதுவிடயம் குறித்து எந்தவொரு விசாரணையையும் எதிர்கொள்ள மாவட்டச் செயலகம் தயாராகவுள்ளது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்வதுடன் மேற்படி தெளிவுபடுத்தலை தங்களது பத்திரிகையில் பிரசுரிப்பின் நன்றியுடையவனாவேன்.


## ஆசிரியர் குறிப்பு:

*1. வீட்டுத்திட்டத்தில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பில் 'உதயன்' பலமுறை வெளிப்படுத்திய போதும் அவற்றுப் பதிலளிக்காமல் 'மௌன விரதம்' இருந்த மாவட்டச் செயலர் க.மகேசன், பொறுப்புக் கூறல் பற்றிச் சுட்டிக்காட்டி அவரது பொறுப்பை வலியுறுத்தியபோதாவது பதிலளிக்க முன்வந்துள்ளமைக்கு நன்றி.*

*2. மாவட்டச் செயலர் வழங்கியுள்ள பதிலில் ஒரு விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார். பயனாளிகள் பட்டியலில் 304பேரின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன என்ற விடயத்தை அவர் ஏற்றுக்கொண்டு ஒப்புதலளித்துள்ளார். முதலில் அவருக்கு நன்றிகள்.*

*3. 'இச் செயற்றிட்டத்தில் பல்வேறு தரப்பினரும் இணைந்து செயற்படுகையில் தனியே யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தையும் மாவட்டச் செயலாளரையும் மாத்திரம் பொறுப்பாக குறிப்பிட்டு' என்று மாவட்டச் செயலர் மேற்படி பதிலில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்ட அமைச்சின் SMRHC/RD/04/01 இலக்க 29.04.2021ஆம் திகதிய கடிதத்தில் 'தவறான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டால், அந்தப் பயனாளிக்கு வீட்டுத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட பணத்தை மீளப்பெற்று வைப்பிலிடுவதற்கு சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலரே பொறுப்பு' என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதனைக் கூட மாவட்டச் செயலரால் விளங்கிக்கொள்ள முடியவில்லையா? அமைச்சு அறிவுறுத்தியதையே உதயனும் சுட்டிக்காட்டியிருந்தான். முறைகேடுகள் ஊழல்களை மாவட்;டச் செயலர் மேற்கொண்டார் என்று உதயன் கூறவில்லை. அவற்றுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர் மாவட்டச் செயலர்தான் என்பதை மீண்டும் அழுத்தம் திருத்தமாக உதயன் பதிவு செய்கின்றான்.*



ග්‍රාමීය නිවාස සහ ඉදිකිරීම් හා ගොඩනැගිලි ද්‍රව්‍ය කර්මාන්ත ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය
கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு
State Ministry of Rural Housing and Construction & Building Materials Industries Promotion

My Ref SMRHC/RD/04/01 Your Ref Date 29.04.2021.

District Secretary
District Secretariat,
Jaffna.

**Construction of Brick and Motor Type / Cement sand block based Permanent Housing Programme for Conflict affected families in Northern & Eastern Province – 2021**

This is to inform you that, the resurvey to check the eligibility of selected beneficiaries sent by you for Housing Project 2021 by this Ministry has been postponed due to the current Covid 19 pandemic situation in the country.

Therefore, this Ministry has decided to release allocation Rs 1910.00 Mn to construct 2162 houses (Rs 378.00 Mn for 630 houses for 1 or 2 member families and Rs 1532.00 Mn for 1532 houses more than 2 member families) in your district subject to beneficiary selection criteria of this Ministry. In addition to that you are hereby requested to strictly follow the following criteria also.

- Selected beneficiaries should be displaced before 2009 due to conflict (core families).
- Beneficiary or any member of the family should not be obtained any permanent housing assistance from Government or any other Agency.
- The resettled families should have their own land with legal documents (Deed, Grant, Lease, LDO permit or letter from Divisional Secretary authenticating and upholding the land claim) and entered in to the vote register.

Beneficiary list shall be recommended by Divisional secretary and need to be approved by the District Secretary.

When the Covid Pandemic situation is under controlled, officials of this Ministry will visit to check the eligibility of beneficiaries by conducting surveys. If not eligible beneficiaries had been selected for Housing Project 2021 the name of ineligible beneficiary will be deleted from Ministry Programme and the relevant District Secretary has responsible to recover the funds from beneficiaries and deposit to the government consolidated fund.

Your kind cooperation in this regard is highly appreciated.

District Secretary has responsible

Eng. Keerthi Ranjith Abeysiriwardena
Secretary
State Ministry of Rural Housing and Construction & Building Materials Industries Promotion

*4. 'சில பிரதேச செயலர் பிரிவுகளில் பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்கள் முன்னுரிமைபடுத்தப்பட்டிருந்தமை மாற்றியமைக்கப்பட்டு இடம்பெயர்ந்த குடும்பங்கள் முன்னுரிமைபடுத்தப்பட்டிருந்தன' என்று பயனாளிகள் பட்டியல் மாற்றம் செய்தமைக்கு மாவட்டச் செயலர் இவ்வாறானதொரு விளக்கத்தையும் வழங்குகின்றார்.*

*அமைச்சின் SMRHC/RD/04/01/01 இலக்க 05.03.2021ஆம் திகதிய கடிதமாகட்டும் அல்லது அமைச்சின் SMRHC/RD/04/01 இலக்க 29.04.2021ஆம் திகதிய கடிதமாகட்டும் அவற்றில் தெளிவாக இடம்பெயர்ந்தோருக்கான வீட்டுத்திட்டம் எனக் குறிப்பிடப்பட்டும், பிரதேச செயலர்கள் நலிவுற்றவர்களை முன்னுரிமைப்படுத்தியிருந்தனர் என்றால் அமைச்சின் சுற்றறிக்கைகளைக் கூட விளங்கிக் கொள்ள முடியாத அல்லது புரிந்துகொள்ள முடியாத 'வினைத்திறனற்ற பிரதேச செயலர்கள்' மாவட்டத்தில் கடமைபுரிகின்றனர் என்று மாவட்டச் செயலர் கூற வருகின்றாரா?*

*5. 'சில பயனாளிகள் ரூபா 6 லட்சம் பெறுமதியான வீட்டுக்குப்பதிலாக ரூபா 10 லட்சம் பெறுமதியான வீடு தேவை என சுயமாக விலகியமை' என்று ஓர் விளக்கத்தையும் மாவட்டச் செயலர் முன்வைத்துள்ளார்.*

*மீள் குடியேற்றப்பிரிவால் மூன்று அங்கத்தவருக்கு குறைவான குடும்பத்துக்கு ரூபா 6 லட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டமும், மூன்றைவிட அதிகமான*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்துக்கு ரூபா 10 லட்சம் பெறுமதியான வீடும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்ட பின்னரே பயனாளிகள் தெரிவு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறான நிலையில் ரூபா 6 லட்சம் பெறுமதியான வீடுகள் கிடைக்கப்பெற்றவர்கள் ரூபா 10 லட்சம் பெறுமதியான வீடுகள் வேண்டும் என்று கேட்டு சுயமாக விலகுவது என்பது 'பசிக்கின்றது என்பவனுக்கு பாணைக்கொடுக்க பீசா தான் வேண்டும்' என்ற கதைக்கு ஒப்பானதாக உள்ளது. தேவை உள்ளவன் கிடைப்பதைப் பெற்றுக்கொள்வான். சரியான பயனாளிகள் தெரிவு செய்யப்படவில்லை என்பதையே மாவட்டச் செயலர் தனது பதில் ஊடாக ஒப்புக்கொள்கின்றார்.

ஆரம்பப் பட்டியலிலிருந்து இதுவரை 304 பேரின் பெயர்கள் மாறியுள்ளன. அதில் 6 லட்சம் ரூபா வீட்டுத் திட்டப் பட்டியலிலிருந்து 102 பேரினதும், 10 லட்சம் ரூபா வீட்டுத் திட்டப் பட்டியலிலிருந்து 202 பேரினதும் பெயர்கள் மாறியுள்ளன. மாவட்டச் செயலர் கூறியதைப்போன்று 'சுயவிலகல்' காரணமாயிருந்தால், 6 லட்சம் ரூபா வீட்டுத்திட்டப் பட்டியலிலேயே அதிகளவு வித்தியாசம் காணப்பட்டிருக்கவேண்டும். இதன் ஊடாக யார் 'புனைகின்றனர் பொய் சொல்கின்றனர்' என்பதை மக்கள் தெரிந்துகொள்ளமுடியும்.

6. 'தகுதியற்ற தவறான பயனாளிகள்' என்று உதயன் சுட்டிக்காட்டிய 304 பேரும் இந்த வீட்டுத் திட்டத்துக்குத்தான் தகுதியற்ற தவறான பயனாளிகளே தவிர அவர்கள் ஒருபோதும் வீட்டுத்திட்டம் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் என்று சொல்லவில்லை.

7. 'இராஜாங்க அமைச்சின் SMRHC/RD/04/01 இலக்க 2021.04.29ஆம் திகதிய கடிதத்தின்படி, பட்டியல்களை மீளச்செவ்வை பார்த்து தகுதியானவர்களை முன்னுரிமைப்படுத்தி அனுப்பும்படி கோரப்பட்டதற்கமைய எனது JF/RES/Housing/1/01/2021 இலக்க 29.04.2021, 11.05.2021 மற்றும் 03.07.2021 திகதிய கடிதங்களின்படி தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியலை மீளவும் காட்சிப்படுத்தி முன்னுரிமைப்படுத்தி அனுப்பிவைக்கும்படி பிரதேச செயலாளர்கள் கேட்கப்பட்டிருந்தனர். பிரதேச செயலாளர்கள் 'வீட்டுக்கு தகுதியானவர்களை' மீள் பரிசீலனை செய்து உரிய காரணங்களுடன் முன்னுரிமைப்படுத்தி சிபாரிசு செய்து சமர்ப்பித்துள்ள பட்டியலே இறுதிப்பட்டியலாக கொள்ளப்படவுள்ளது' என்று மாவட்டச் செயலர் கூறுகின்றார்.

JF/RES/Housing/1/01/2021 இலக்க 29.04.2021, 11.05.2021 ஆகிய திகதிகளில் மாவட்டச் செயலரால் அனுப்பப்பட்ட கடிதங்களில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயனாளிகள் பட்டியலை மீளவும் காட்சிப்படுத்தி முன்னுரிமைப்படுத்தி அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர்கள் கோரப்படவில்லை.

03.07.2021ஆம் திகதிய மாவட்டச் செயலரின் கடிதத்திலேயே பயனாளிகள் பட்டியல் மீளக் காட்சிப்படுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

19.06.20221ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஊடாக பிரதமர் அலுவலகத்துக்கு வீட்டுத்திட்ட முறைகேடு தொடர்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான செய்தி 'உதயனிலும்' வெளியாகியிருந்தது. இந்த நிலையில் பிரதமரின் இணைப்பாளான கீதநாத் காசிலிங்கம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வருகை தந்து தென்மராட்சி பிரதேச செயலகத்தில் 25.06.2021ஆம் திகதி கலந்துரையாடல் நடத்தியிருந்தார். இதன்போது பயனாளிகள் பட்டியலில் இந்த வீட்டுத் திட்டத்துக்கு தகுதியற்றவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டமையைத் தொடர்ந்து பட்டியலை மீளக் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தார்.

இதற்கு அமைவாகவே 03.07.2021 ஆம் திகதி மாவட்டச் செயலர் சகல பிரதேச செயலர்களுக்கும் பட்டியலை மீளக் காட்சிப்படுத்துமாறு பணித்திருந்தார்.

06.07.2021 இலிருந்து 12.07.2021 வரை பயனாளிகள் பட்டியலை காட்சிப்படுத்துமாறு மாவட்டச் செயலர் அறிவுறுத்திய பின்னரும் பல பிரதேச செயலகங்களில், கிராம அலுவலர் அலுவலகங்களில் பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனை 'உதயன்' தனது நேரடியான களத்தரிசிப்பின் ஊடாக அம்பலப்படுத்தியிருந்தான். இதன் பின்னரும், பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தாத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் இருந்ததன் ஊடாக அவர்களின் 'மூடி மறைப்புக்கு' மாவட்;டச் செயலர் உடந்தையாக இருந்தார்.

இதனையடுத்து 'உதயன்' 08.07.2021 அன்று வீட்டுத்திட்ட பயனாளிகளின் விவரங்களை வெளியிடப் போவதாகத் தெரிவித்து செய்தி பிரசுரித்திருந்தான். 'உதயனில்' பயனாளிகள் விவரங்களைப் பிரசுரிப்பதை நிறுத்துங்கள் என்று அன்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன், தொலைபேசி ஊடாக ஒருவரை 'கெஞ்சியதையும்' 'உதயன்' அறிவான். பயனாளிகள் பட்டியல் பகிரங்கப்படுத்துவதை தடுப்பதுவா வெளிப்படைத்தன்மை? அல்லது நேர்மைத்திறன்?

பட்டியலை மீளக்காட்சிப்படுத்தும்போதே 187பேரின் பெயர்கள் மாற்றப்பட்டிருந்தன. பின்னர் 117 பேரின் பெயர்கள் மாற்றப்பட்டன. பட்டியல் மீளக் காட்சிப்படுத்தப்பட்டிருக்காவிட்டால், இந்த வீட்டுத்திட்டத்தில் வீடுகளைப் பெற தகுதியான 304 பேருக்கு அது கிடைத்திருக்காது. பிரதேச செயலாளர்கள் 'வீட்டுக்கு தகுதியானவர்களை' மீள்பரிசீலனை செய்து உரிய காரணங்களுடன் முன்னுரிமைப்படுத்தி சிபாரிசு செய்து சமர்ப்பித்துள்ள பட்டியலே இறுதிப்பட்டியலாக கொள்ளப்படவுள்ளது என மாவட்டச் செயலர் கூறுகின்றார்.

சமர்ப்பித்துள்ள பட்டியலே இறுதிப்பட்டியலாக என்று மாவட்டச் செயலர் 'மொட்டை'யாகக் குறிப்பிட்டுள்ளார். எந்தத் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை வசதியாக வெளிப்படுத்தாமல் தவிர்த்து மூடி மறைத்துள்ளார்.

மாவட்டச் செயலர் கூறுவதைப்போன்று இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாமலா 31.05.2021 இலிருந்து இந்த வீட்டுத்திட்டத்துக்கான கொடுப்பனவுகளை விடுவித்துள்ளார்? அது நிதி நிர்வாக நடவடிக்கைகளுக்கு முரணாக அமையாதா?

இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாமலா 13.07.2021 அன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள் அனுமதித்த பட்டியலில் மாற்றம் செய்யமாட்டேன் என்று மாவட்டச் செயலர் கூறினார்? இறுதிப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாமலா 13.07.2021 அன்று தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 4 வீடுகளுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர் வீட்டுக்கு அடிக்கல் நடுகை செய்தார்?

வீடுகளுக்கு அடிக்கல் நடுகை செய்த தகவல் கூட தனக்குத் தெரியாது என்று 13.07.2021 அன்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மாவட்டச் செயலர் தெரிவித்திருந்த நிலையில் மறுநாள் 14.07.2021 அன்று உதயன் பத்திரிகையில் ஒளிப்பட ஆதாரத்துடன் வீட்டுக்கான அடிக்கல் நடுகை செய்யப்பட்டிருந்த செய்தி வெளியாகியிருந்தது. மாவட்டச் செயலர் கூறுவதைப்போன்று பட்டியல் இறுதி செய்யப்படவில்லை என்றால் அதற்கு முரணாக இடம்பெற்ற இந்த நடவடிக்கை தொடர்பில் இதுவரை ஏன் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை?

8. கடந்த 36 ஆண்டுகளாக 'உதயன்' இந்த மண்ணிலிருந்து இந்த மக்களோடு மக்களாக இருந்து வருகின்றான். ஆயுதப் போராட்ட காலத்தில் கரணம் தப்பினால் மரணம் என்ற உயிர் வாழ்வு நிச்சயமற்ற சூழலிலும் எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிபணியாது அதற்கு இடம்கொடாது 'முதுகெலும்புடன்' பணியாற்றிய மாவட்டச் செயலர்களால், இந்த மாவட்ட மக்கள் பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றப்பட்டனர். அப்படிப்பட்ட திறமையான நிர்வாகிகளே யாழ்ப்பாண மாவட்டத்தின் மாவட்டச் செயலர் கதிரையை அலங்கரித்திருந்தனர் என்பதையும் 'உதயன்' மீண்டும் அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்கின்றான்.

## அறுவடை விழா

கிளிநொச்சி,ஓக.7

புளியம்பொக்கணை கமநல சேவைதினைக்கள பிரிவின் கீழ் பெரியகுளம் பகுதியில் பரீட்சார்த்த புதிய வகை நெல் இனத்துக்கான அறுவடை நிகழ்வு நேற்று நடைபெற்றது.

புளியம்பொக்கணை கமநல சேவைத் திணைக்களத்தின் விவசாய போதனா ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கமக்கார அமைப்புகள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-113)



## அரங்க கதையாடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.7

புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அரங்கச் செயற்பாட்டாளரும் இணுவில் மத்தியகல்லூரி நாடகமும் அரங்கியலும் ஆசிரியருமான கி.சுதாகரன் "தெருவெளி அரங்கில் அரங்கச் செயலாளியின் வகிபங்கு" என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார் .

அறிமுக உரையை அரங்கச் செயற்பாட்டாளர் எஸ்.தேவமுகுந்தனும், நிறைவுரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரனும் வழங்கவுள்ளனர்.

இவ் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 72929251102 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்துகொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# கிளிநொச்சி மாவட்டத்துக்கான விவசாயக் குழுக் கூட்டம்

கிளிநொச்சி,ஓக.7



கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இரணைமடு நீர்பாசனத்திட் டத்தின் கீழ் காலபோக, சிறுபோக நீர்பாசனத்துக்காக வட்டக்கச்சி 180 ஏக்கர்,மகிழுங்காடு 117 ஏக்கர், மருதநகர் 48 ஏக்கர் உள்வாங்குவதாக தீர்மானிக்கப்பட்டது ஏனைய இடங்களை எதிர்வரும் காலங்களில் பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த.இராஜகோபு தெரிவித்தார்.

அத்துடன் முரசுமோட்டை கமக்காரர் அமைப்பில் 4 ஆயிரம் ஏக்கர் வரையான வயல் நிலங்கள் உள்ளதால் இவ் அமைப்பை மூன்றுக்கு குறையாத அமைப்பாக பிரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.தேவரதன் தெரிவித்தார். கால், அரை ஏக்கர்களில் தூவல் நீர்ப்பாசன பொறிகளுக்கான மானிய உதவிகள் மற்றும் வாழைச் செய்கைக்கான மானிய உதவித்திட்டங்கள் என்பன வழங்கப்படவுள்ளன என்று மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.அற்புதச்சந்திரன் தெரிவித்தார். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** எதிரிகள் அடங்குவர். தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதிர்ஷ்டமான, அமைதியான நாள். எண்ணம் ஒன்று நிறைவேறும். பகைவர் மனம் மாறி முன்வந்து நட்பாக வாய்ப்புண்டு. மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம்.

**இடபம்:** எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணிவாகப் பேசி நன்மையடைவீர்கள். அலுவலகமுன்னேற்றம்பற்றியகவலை ஒன்று நீங்கும்.அரசாங்கத்தின் உதவி தாமதத்துக்குப்பின் கிடைக்கும்.

**மிதுனம்:** புதிதாக அறிமுகமான நண்பர்கள் உதவி கேட்டு வருவர். யாரிடமும் பிடிவாதமின்றி வளைந்து கொடுத்துப் போவீர்கள். சிரமம் ஒன்றிலிருந்து விடுபட்டு மன நிம்மதியடைவீர்கள்.

**கடகம்:** நட்பை மதிக்காதவர்களை நினைத்து வருந்த வேண்டாம். நம்பிக்கை இழக்காமல் சவாலான முயற்சிகளைத் தொடர்வீர்கள். நீண்ட நாள் கவலை தீர்வது குறித்து மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:** கோபிக்க வேண்டிய நேரகளில் அமைதி காத்து வெல்வீர்கள். மன நிம்மதி மீளும். விட்டுப்போன தொடர்புகளைப் புதுப்பிப்பீர்கள். . மகளின்/ மகனின் போக்கு மாறி திடீர் மகிழ்ச்சி அளிக்கும்.

**கன்னி:** எதையும் அதிக முயற்சிக்குப் பின்தான் முடிக்க இயலும். உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கவில்லை என வருந்தாதீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**துலாம்:** புது முயற்சி சற்றுத் தள்ளிப் போனால் அது நன்மைக்கே. தாயாருக்கு நன்மை ஏற்படும். பிடிவாதத்தை விட வேண்டும். வாழ்வு மேம்படுவதைக் கண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் செயலால் குடும்ப கௌரவம் உயரும். வெளிநாட்டில் உள்ளவர்கள் பெற்றோரைச் சந்திப்பீர்கள். மன பாரம் விலகி நிம்மதி உண்டாகி செயல்களில் தெளிவு வரும்.

**தனுசு:** எந்தச் செயல்பாட்டிலும் பதற்றமோ அவசரமோ கூடாது. புது முயற்சி வெல்லும். பழிகளைத் துடைத்தெறிந்து நிமிர்வீர்கள். எண்ணம் ஈடேறும்.

**மகரம்:** பேசும் வார்த்தைகளால் நன்மையும் லாபமும் கூடும். லோன் போட்டிருந்தால் எளிதாகக் கிடைக்க நண்பர் உதவுவர். உடல் உழைப்பை நம்புபவர்களுக்கு நன்மை பெருகும்.

**கும்பம்** பலவித நிகழ்வுகள் ஒரே நாளில் நிகழ்வதால் மகிழ்வீர்கள். பெரிய திட்டம் ஒன்றைக் கையில் எடுத்துச் செய்ய ஆரம்பிப்பீர்கள்.

**மீனம்:** எது செய்தாலும் அதை மிக நேர்மையாகச் செய்யுங்கள். நினைத்ததை நடைபெறுவதற்கான அடையாளம் தெரியும். விலை உயர்ந்த அல்லது வாசனைப் பொருட்கள் வாங்குவீர்கள்.




# 'பீஸ்ட்' படத்தில் 3 வில்லன்கள்

'கோலமாவு கோகிலா', 'டாக்டர்' ஆகிய படங்களை இயக்கிய நெல்சன், தற்போது விஜய் நடிக்கும் 'பீஸ்ட்' படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். மேலும் அபர்ணா தாஸ், விடிவி கணேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றனர். அனிருத் இசையமைக்கும் இப்படத்திற்கு, மனோஜ் பரமஹம்சா ஒளிப்பதிவு செய்கிறார்.

இந்தப் படம் காதல், நகைச்சுவை, அதிரடி சண்டை காட்சிகளுடன் தயாராகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இப்படம் குறித்து புதிய அறிவிப்பு ஒன்று வெளியாகி உள்ளது. அதன்படி 'பீஸ்ட்' படத்தில் 3 வில்லன்கள் நடிக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது. அதில் ஒருவராக மலையாள நடிகர் ஷைன் டாம் சாக்கோ நடிக்கவுள்ளார் எனவும், மற்றவர்கள் குறித்த தகவல் விரைவில் வெளியாகும் எனவும் கூறப்படுகிறது.



# கொரோனா காதல்

இ-பாஸ் இல்லாமலேயே
இதயத்துக்குள் வந்தவளே!

கபசுரக் குடிநீர் போல
நெஞ்சுக்குள் நின்றவளே!

N95 அணிந்திருந்தும்
மூச்சுடன் கலந்தவளே!

ஆவி பிடிப்பதுபோல் என்
ஆத்மாவைப் பிடித்தவளே!


ஒட்சிசனாக உள்வந்து
இதயத்தில் துடித்தவளே!

அல்கஹால் சானிடைசராக
கைகழுவிய காரணமென்ன?

ICUவில் இடமில்லா
அரசு மருத்துவமனைபோல்
அணுவளவும் இரக்கமில்லா
அசுர கொரோனா போல்

அழகிய இளம் பெண்ணே நீ
அவதாரம் எடுத்ததென்ன?

# மனித பற்களுடன் பிடிபட்ட அதியச மீன்



அமெரிக்காவில் மனித பற்களை கொண்ட அரிய வகை மீன் ஒன்று மீனவர் வலையில் சிக்கியுள்ளது. அமெரிக்காவின் வடக்கு கரோலினா பகுதியைச் சேர்ந்தவர் நாதன் மார்டின், இவர் அமெரிக்காவில் மீன் பிடி தொழில் செய்து வருகிறார். இவர் சமீபத்தில் இவர் இவரது சகோதரர் உடன் மீன் பிடிக்க சென்றார். அப்பொழுது அவரது வலையில் அரிய வகை ஆட்டு தலை மீன் ஒன்று சிக்கியது . இந்த மீன் பார்ப்பதற்கு மனிதர்களுக்கு இருக்கும் பல்லை போல இருக்கும். ஆடுகளுக்கு இருக்கும் தலையை போல காணப்படுகிறது.

இந்த மீன் வலையில் சிக்குவது அரிது என்றும் இந்த மீனுக்கு வாயில் மனிதர்களைப் போன்று பல வரிசையில் பற்கள் காணப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகின்றது.







காண்பதற்கு அழகானவரை தேடாதே.....
காண்பதை எல்லாம் அழகாக்கும் ஒருவரை
தேடு....வாழ்க்கையை அழகாக்கும் .

எதிலும் அளவோடு இருந்தால்
அவதிப்படவும் தேவையில்லை ...
[illegible] தேவையில்லை ....

விருப்பத்தை குறைத்து கொள்ளுங்கள்
விளைவுகள் குறையும்
ஆசையை குறைத்து கொள்ளுங்கள்
ஆபத்துகள் குறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திடீர் சுகவீனம் காரணமாக ஜூமா மருத்துவமனையில்!

## கலவரம் தீவிரமாகலாம்

**ஜோகன்ஸ்பெர்க், ஓக. 7**

**தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமா சிறைச்சாலையில் இருந்து திடீர் சுகவீனம் காரணமாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். இதனால் ஜூமாவை விடுவிக்க வேண்டும் என்று இடம்பெற்றுவரும் கலவரம் மேலும் தீவிரமாகலாம் என்று கருதப்படுகின்றது.**

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமா ஊழல் வழக்கில் கடந்த மாதம் 7ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இதைக் கண்டித்து அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு போட்டியாக ஆளும் கட்சியினரும் வன்முறையில் இறங்கியுள்ளனர். ஜேக்கப் ஜூமா அதிபராக பதவி வகித்தபோது. இந்தியர்களுக்கு நாட்டை தாரை வார்த்து விட்டனர் என்று அவர்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர். இந்தக் கலவரங்களில் இதுவரை 450க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் திடீர் சுகவீனம் ஏற்பட்டு ஜூமா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டமை திடீர் பதற்ற நிலையை அங்கு ஏற்படுத்தியுள்ளது. கலவரங்கள் தீவிரம் பெறுவதால் இறப்புக்களும் மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)




# ஹிஜாப் அணியாததால் இளம்பெண் படுகொலை

## தலிபான்கள் அடாவடி


காபூல், ஓக. 7

ஹிஜாப் அணியாததற்காக இளம்பெண் ஒருவரை தலிபான்கள் கொன்றுள்ளனர் என்று ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாட்டுப் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறி வருவதால், ஆப்கான் மீதும் பொதுமக்கள் மீதும் தலிபான்கள் தங்களது தாக்குதலை அதிகரித்து வருகின்றனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு இந்தியப் பத்திரிகையாளர் டேனிஷ் சித்திக் கொல்லப்பட்டார். கடந்த வாரம் ஆப்கனின் பிரபல நகைச்சுவை நடிகர் நசார் முகமத் கொல்லப்பட்டார். இந்தக் கொலைகள் உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. இந்த நிலையில் இளம்பெண் ஒருவரை தலிபான்கள் கொலை செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுகுறித்து ஆப்கன் ஊடகங்கள் தரப்பில், 'ஆப்கானிஸ்தானில் பால்க் மாவட்டத்திற்கு காரில் சென்று கொண்டிருந்த நசானின் என்ற 21 வயது பெண் ஹிஜாப் அணியாததற்காக தலிபான்கள் கடத்திச் சென்று கொன்றுள்ளனர்' என்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. தலிபான்களின் விதிமுறைகள்படி, பெண்கள் கல்வி கற்பது, ஹிஜாப் அணியாமல் இருப்பது குற்றமாகும். (ம)



# ஆப்கான் இராணுவம் அதிரடி 300 தலிபான்கள் படுகொலை

காபூல். ஓக. 7

ஆப்கானிஸ்தான் இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் சுமார் 300க்கும் மேற்பட்ட தலிபான்கள் நேற்றுமுன்தினம் கொல்லப்பட்டனர் என்று ஆப்கானிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் கடந்த 20 ஆண்டுகளாக போர் நீடித்து வருகின்றது. ஆப்கானிஸ்தான் அரசுக்கு ஆதரவு வழங்கிய அமெரிக்கா தனது படைகளை திரும்பப் பெற்றதை அடுத்து ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் நாளுக்குநாள் மேலோங்கி வந்தது. இந்த நிலையில், தலிபான்களின் உடுருவலைத் தடுக்கும் வகையில் நேற்றுமுன்தினம் ஆப்கானிஸ்தான் இராணுவம் வான் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலிலேயே சுமார் 300க்கும் மேற்பட்ட தலிபான்கள் உயிரிழந்துள்ளனர்.

சுமார் [illegible] என்றும் தெரிவிக்கப்[illegible] எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோவிலொன்று பாகிஸ்தானில் அழிப்பு!

இஸ்லாமபாத், ஓக. 77

பாகிஸ்தானில் இந்து மதத்தை சேர்ந்தவர்களையும் அவர்கள் வழிபாடு நடத்தும் கோவில்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. நேற்றுமுன்தினமும் இந்துக் கோவிலொன்று கொடூரமாக இடித்தழிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் சிறுபான்மையாக வாழ்ந்துவரும் இந்துக்கள், சீக்கியர்கள் உள்ளிட்டோருக்கு எதிரான வன்முறைகளும், குற்றங்களும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, இந்து மதத்தை சேர்ந்தவர்களையும் அவர்கள் வழிபாடு நடத்தும் கோவில்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இந்த சம்பவங்களை அந்த நாட்டில் செயல்பட்டு வரும் பல்வேறு அரசியல் கட்சிகளும், மத அமைப்புகளும் ஆதரிக்கின்றன. இந்நிலையில், பஞ்சாப் மாகாணம் ரகிம் யார் கான் மாவட்டம், போங் நகரில் உள்ள புகழ் பெற்ற விநாயகர் கோவில் நேற்றுமுன்தினம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. (ம)



■ கம்சாயினி ரவீந்திரன்
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக் கழகம்.



# விவசாய பொருளாதாரத்தில் கொவிட் தொற்றின் தாக்கம்

உலகின் பிற பகுதிகளுடன் சேர்ந்து இலங்கையும் வாழ்க்கை நினைவகத்தில் மிகப்பெரிய சுகாதார நெருக்கடியைக் சந்தித்துக்கொண்டிருக்கிறது. கொவிட்-19 தொற்று நோய் உலகளாவிய ரீதியில் வேகமாக அதிகரித்துள்ளது. மேலும் இது நாட்டுக்கு ஏற்படுத்தும் அச்சுறுத்தலை யாரும் புறக்கணிக்க முடியாது. இலங்கை பொருளாதாரத்தில் இதன் தாக்கத்தை மதிப்பிடுவது எந்த வகையிலும் எளிதான காரியமல்ல, ஏனெனில் இதற்கு முன்னர் இலங்கை இந்த அளவிலான நெருக்கடியை எதிர்கொள்ளவில்லை.

**எதிர்மறையானது வளர்ச்சிப் பாதை**

தற்போதைய சூழ்நிலைகளைப் பொறுத்தவரை, 2020ஆம் ஆண்டில் இலங்கைக்கு 0.5 வீதமான எதிர்மறை வளர்ச்சியை சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் கொடுப்பனவுகளும் செலுத்தவேண்டிய நிலையில், நிதி பற்றாக்குறையைக் குறைப்பதற்கான சவால்களை அரசாங்கம் இப்போது எதிர்கொள்கிறது. எனவே நாணய மதிப்பைக் குறைப்பதற்கான அழுத்தத்தைத் தணிக்க ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு முதலீட்டை மேம்படுத்துதல் மற்றும் தொடர்ந்து அதிகரித்து வரும் பொதுச் செலவுகளை சமாளிக்க அரசாங்கத்தின் வருவாயை அதிகரித்தல் ஆகியவை முன்னுரிமை பெறுகின்றன.

கொவிட்-19 பரவலால் இலங்கையின் விவசாயத்துறை இதுவரை ஒப்பீட்டளவில் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை, ஏனெனில் இந்தத்துறை உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுடன் தளர்வாகவே ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாதிப்பின் தொடக்கத்தில் இருந்தே விவசாயத்தில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க சரியான நேரத்தில் அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. இருப்பினும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக பல விவசாயிகள் இன்னும் கடுமையான இழப்பை சந்தித்தனர், மேலும் தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகள் வர்த்தகத்தையும் தடைசெய்தன.

இலங்கையில் சுமார் 40 வீதமான மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர், இருப்பினும் உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில் இத்துறை 10 வீதமான பங்களிப்பை மட்டுமே வழங்குகின்றது. குறைந்த உற்பத்தித் திறன், நீர் மற்றும் நில பயன்பாட்டு திறனற்ற தன்மை மற்றும் நீண்டகாலமாக அறுவடைக்கு பின்னான இழப்புக்கள் ஆகியவற்றால் இந்தத் துறை பாதிக்கப்பட்டுள்ளது. உலகளாவிய காலநிலை இடர் குறியீட்டில் 2ஆவது நிலையில் இருப்பதால், இலங்கை விவசாயத்துறை மாறிவரும் காலநிலை மற்றும் இயற்கை பேரழிவுகளையும் இந்த கொவிட் காலப்பகுதியில் அனுபவித்து வருகிறது. வேளாண் விநியோகச் சங்கிலியைப் பாதுகாக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், 2.1 மில்லியன் விவசாயக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம் உள்ளது. ஊரடங்கு கால ஆரம்பத்திலேயே விவசாய நடவடிக்கைகள் மற்றும் உணவு வழங்கல் சங்கிலிகளுக்கு விலக்கு அளித்திருந்தாலும், செயல்படுத்தலில் சிக்கல்களாக கடுமையான தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் மொத்த சந்தைகளில் விலை சரிவு என்பவை பிரச்சனைகளாகக் காணப்பட்டன.

**கால்நடை வளர்ப்பிலும் கொவிட் தீவிர தாக்கம்**

கால்நடைத்துறையிலும் கொவிட் தாக்கம் ஏற்படுத்திய சேதம் மிகப் பெரியது. இந்த கொவிட் காலப்பகுதியில் விலங்கு தீவனங்களுக்கான அணுகல் தடை, கட்டுப்பாடுகள் காரணமாக செயலாக்க நிறுவனங்களின் செயல் குறைப்பு மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை, சந்தைகள் மூடப்பட்டமை மற்றும் செயலிழப்பு என்பவை பெரிய அளவில் பண்ணை உற்பத்தியாளர்களின் வருமானத்தைக் குறைத்தன. இலங்கையில் உள்ள கோழி வளர்ப்பு சங்கத் தலைவரின் கூற்றுப்படி, நாட்டில் சுமார் 5000 பிராய்லர் விவசாயிகள் மற்றும் 3000 லேயர் விவசாயிகள் இந்தத் தொற்றால் கணிசமாகப் பாதிக்கப்பட்டார்கள். எனினும் கால்நடை (பால்) விவசாயிகள் குறைவான பாதிப்பையே எதிர்கொண்டனர். காரணம் ஊரடங்கு காலப்பகுதிகளிலும் அவர்களால் ஓரளவு பாலை தொடர்ந்து விற்க முடிந்தது.

சந்தை மூடல், போக்குவரத்து பாதைகளுக்கான தடைகள் என்பவைன அதிகரித்த விவசாய உற்பத்திப் பொருள்கள் இழப்புக்கும் வீணாவதற்கும் வழிவகுத்தன. வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த மூடப்பட்ட மொத்த காய்கறி சந்தைகளால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. எவ்வாறாயினும் ஊரடங்கு நேரத்தில் காய்கறிகளை கொண்டுசெல்ல அரசாங்கம் ஒப்புதல்களை ஊரடங்கின் பிற்பகுதிகளில் வழங்கி இருந்ததால் இழப்புக்களை ஓரளவு குறைக்க உதவியாக இருந்தது. இறக்குமதி மீதான தடை கால்நடை மருந்துகள் மற்றும் இரசாயன உரங்களில் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. அத்தோடு சில பகுதிகளில் விதைகளின் குறைந்த முளைப்பு சதவீதமும் விதைகளின் தரத்தில் ஒரு பிரச்சனையாக பரவி இருந்தது. இவ்வாறு பல ஏற்ற இறக்கங்களையும் பொருளாதார பின்னடைவையும் கொவிட் விட்டுச்செல்லும் பெரிய நினைவலைகளாக மாறியிருக்கிறது. கொவிட் தவிர மாறி வரும் காலநிலை மற்றும் பொருளாதார நெருக்கடியாலும் இந்தத் துறை பாதிப்பை சந்தித்தது, மேலும் சந்திக்க நேரிடலாம். ஆயினும் கூட, இந்த விவசாயத்துறை 2020ஆம் ஆண்டு இறுதியில் ஒரு வீதமான நேர்மறையான வளர்ச்சியை எட்டும் என்றே கணிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் பொருளாதாரம்; 1.7 சதவீதமும் விவசாயம் 5.6 சதவீதமும் சுருங்கியதால் இலங்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமைக்குறைப்பு ஆகியவற்றில் பெற்ற லாபங்களை கடுமையாக மாற்றி அமைத்தது.



**உணவு உற்பத்தித்துறையில் இறுக்கமான பொறிமுறை தேவை**

மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தெளிவான தொடர்புகளுடனும் மத்திய மட்டத்தில் பொது உணவு உற்பத்தி விநியோகத்தில் நன்கு நிறுவப்பட்ட மற்றும் நிரந்தர வழிமுறை இலங்கைக்கு தேவை. மேலும் உள்ளூர் விவசாய உற்பத்தி முறையை சாத்தியமான முறைகேடுகளில் இருந்து பாதுகாக்கவும், அரசாங்க தலையீடுகளின் செயற்திறனை உறுதிப்படுத்தவும் ஒரு வழக்கமான கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட வேண்டும்.

தேசிய உணவு பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கும் ஒரே பொருளாதாரத்துறை விவசாயம் மட்டுமல்ல என்றாலும், நாம் சிறப்பாக வளரக்கூடியதை வளர்ப்பது, எங்களால் முடிந்ததைச் செய்வது எந்தவொரு நியாயமான சந்தேகத்திற்கும் அப்பாற்பட்ட வெற்றிக்கான திறவுகோலாகத் தெரிகிறது. கொவிட் 19 நம் உடல் நலம், மன நலம் மற்றும் பொருளாதாரத்தை கடுமையாக தாக்கி உள்ள இந்த நிலையில் எல்லா துறைகளிலும் உள்ள அனைத்து கட்சிகளும் இறுதியாக ஒன்றிணைந்து ஒன்றாக சிந்தித்து ஒரு பொதுவான இலக்கை அடைய ஒரு இயல்பான வாழ்க்கையை, புதிய இயல்பான உலகில்' உறுதிப்படுத்த வேண்டும்.


தன்னிறைவு பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்றால் விவசாயத்தை மையமாகக் கொண்டு இருந்த கொள்கைகளை விவசாயிகளை மையமாகக் கொண்டு மாற்ற வேண்டும் என்பதனை அரசுக்கும் மக்களுக்கும் உணர்த்திய காலம் இது. இந்த மாற்றத்துக்கான ஆரம்பப் படிப்பினையை உலகத்தோடு சேர்ந்து நம் நாடும் எட்டியுள்ளது.

இலங்கையில் தாராளவாத பொருளாதாரக் கொள்கை உள்ளது. எனவே விவசாய சீர்த்திருத்தங்களில் உயர் தொழில்நுட்பங்கள் விவசாயியின் களம் வரை கொண்டு செல்லப்படுவதோடு பாரம்பரிய விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கும் ஒன்றாக மாறியே ஆக வேண்டும். அந்த மாற்றத்தை நோக்கி நாட்டை இயக்க வேண்டும் என்பது பொறுப்பு வாய்ந்தோரின் மிக முக்கிய கடமையாகும்.

வேளாண்மை பொருள்களின் மதிப்பை அதிகரிக்கச் செய்ய சந்தைப்படுத்தலும், கிராம மட்டம் வரை அதன் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வாழ்வாதாரச் தொழில் பயிற்சிகளை வழங்குதல் என்பனவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இதனால் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புக்கள் உயர்த்தப்பட வேண்டும். இத்தகைய கொள்கைகள் மாற்றப்பட்டு சிறந்த தன்னிறைவு பொருளாதார வளர்ச்சியின் மூலம் வறுமையை ஒழிக்கவும் இன்னுமொரு உயிரியல் உலக போர்களுக்கு முகங்கொடுக்கவும் நிச்சயமாக நம் இளம் சந்ததி மாற்றம் பெற வேண்டும். இது சிறந்த படிப்பினை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. சின்னைய்யா வேலாயுதம்

( ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தர் சீமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை )

யாழ். கரவெட்டி துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும். மாதகல் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு. சின்னைய்யா வேலாயுதம்** அவர்கள் (04-08-2021) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னைய்யா - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் புகனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும். இந்திராணி (சுவிஸ்) சற்குணராணி (பிரான்ஸ்). கயேந்திரராணி (யா/பெரியபுலம் ம.வி.ஆசிரியர்). ஆனந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லையா. கணபதிப் பிள்ளை. வேலுப்பிள்ளை. பொன்னம்மா. செல்லம்மா. சின்னப்பிள்ளை (பூமி) ஆகியோரின் அன்புச் சகோதரரும். அருள்மோகன். வாணிதாசன். குகதாசன். அனுசுயா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷர்மினி மார்க். அஞ்சலிக்கா துஷ்யந்தன். அனோஜன். சிவானி பென்னுவா. மிதுன். சரண். அபிராமி ஆதித்யன். அஷ்மிதா. ஆரண்யன் ஆகியோரின் அன்புப் பேரனும். தியானா அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.08.2021) அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

## மண் மேடு சரிந்து ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஓக.7

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தளை மஹாவெல, கவுடுபெலல்லப் பகுதியில் நடந்துள் ளது. சம்பவத்தில் மாத்தளை குருகஸ்பிட்டிய வைச் சேர்ந்த 42 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் லொறி ஒன்றும் மண்ணுக் குள் புதை யுண் டுள்ளது.

மண் அகழ்வு பணியில் ஈடுபட்டி ருந்த போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை மஹாவெல பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.4)

## INVITATION FOR BID 2021/03
## Regional Directorate of Health Services Jaffna

1. The **Chairman, Regional Procurement Committee,** on behalf of the Regional Directorate of Health Services, Jaffna, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents and in the bidding Data & Contract Data (Section 5) for **SBD 1** Documents.

5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days and Saturday from 09.00 hrs to 15.00 hrs.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road Jaffna. (T.P:0212227889, Fax:0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.

7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No 572/3 Hospital Road, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, 572/3 Hospital Road, Jaffna on commencing at 02.30 P.M on the date mentioned in the table.

9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| CATEGORY I | Document Issuing/Purchasing Period | | | From 07.08.2021 until 21.08.2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 02.30 P.M on 13.08.2021 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 23.08.2021 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2021/LM/ W/22 | Construction of GHC at Ariyalai,Jaffna | 4.03 | 97 Days | C 8 and C7 (Buildings) | 3,500.00 | 41,000.00 | Till 02.12.2021 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service,Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### தேவை

உள்ளூர் சேவைக்கு பாரஊர்தி சாரதிகள். தொழிலாளர்கள். உழுந்து உடைக்கும் ஆலைத் தொழிலாளர்கள் தேவை.

**தொடர்பு : 077 7722 215**

### வாடகைக்கு தேவை

நல்லூர். கல்வியங்காடு ப்குதிகளில் சிறிய வீடு அல்லது Room வாடகைக்கு உடன் தேவை.

**077 640 2406**

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் மற்றும் சப்ளையர் தேவை.

**ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.**

**தொடர்பு 077 314 7580**




## கண்ணீர் அஞ்சலி

### திரு. செல்லத்துரை சிவஞானம்

( ஓய்வு நிலை அதிபர், யா/மட்டுவில் சந்திர மௌளீச வித்தியாலயம் )

அவர்கள் நேற்று (06.08.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தவர்க்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
யா/மட்டுவில் சந்திர மௌளீச வித்தியாலயம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திரு. தங்கன் முருகதாஸ் அவர்களின் அன்புத் தந்தை

### திரு. மூத்தான் தங்கன்

அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

# மரண அறிவித்தல்

## திருமதி. தேவசகாயம்பிள்ளை செகராசசிங்கம் ஞானரெத்தினம்



யாழ்ப்பாணம் பாசையூரைப்பிறப் பிடமாகவும் பாசையூர் 2[ம்] குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவசகாயம்பிள்ளை செகராச சிங்கம் ஞானரெத்தினம் நேற்று (06.08.2021) வெள்ளிக்கிழமை தனது 96 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை செகராசசிங்கம் என்பவரின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சிங்கத்துரை - றேனம்மா தங்கராசம் தம்பதியரின் அன்பு மகளும் ஆசீர்வாதம் - செல்ல இராசாத்தி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான குணசிங்கம். இரத்தினசிங்கம் அந்தோனியப்பு. துரைவீரசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஞானசீலன் (மட ்ன்துரை) நிர்மலாந்தன் (சேர்ச்சில்துரை ) காலஞ் சென்ற ஜெயசீலன் ( பெரியது ர) தவசீலன் (சின்னத்துரை) சத்தியசீலன் (பாலா) ஞானசோதி .ஜெயசிறி செல்வசிறி. ராஜசிறி சுபசிறி (பாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரிறோஸ் பவுண். றவ்வாயல் மகாராஜா. ஜான்சிராணி. காலஞ்சென்ற நவரெட்ணராஜா மற்றும் இம்மானுவேல். ராணி. றஜனி. ஸ்ரிவின்சன் யோகன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும். ராஜபுத்திரன்.வெண்ணிலா ரவிராஜபுத்திரன் மதிவதனி மணிவண்ணன். ராஜமகான். செல்வகான். காலஞ்சென்ற பியூட்டி. துரைமகான். தமிழ்வண்ணன். வண்ணநிலா சோபிதவதனி. கோமகள். குலமகள் ஹேபேட் எழில்வதனி நிம்புறோட். சுந்தரவதனி. நிரோஜன். இளவழகன் மிருதுளா நிஷாந்தன். ஜெயாராஜ். பிங்கி நேவின் சேரன் ஞானசேத். றெபேக்கா சோழன் பாலஜனனி. சசி ஆகியோரின் பிரியத்துக்குரிய பேத்தியாரும். ஏமி ஏபள் காயத்திரி. ராஜ்யா. ஆர்த்திகா ஆர்ஷிதன் கனா. அரண்.அரணி. அபி.அன்றியா.ஸரீவ்.ஆஷிகா ஜேரியல். சிறிமாறன் தேசிகன்.தனஞ்சயா.பிரசன்னா.ஆர்மதி. கேசரன்.பிரகீர்த்தி. லிசி ஆரணவர்மன். ஆவர்த்தனா ஆகியோரின் செல்லப்பூட்டியுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (07.08.2021) சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 . 11 . 1934 | 05 . 08 . 2021 |



**Medcon (Pvt) Ltd**

உரிமையாளர் திரு.சதாசிவம் சிவகுமார்
அவர்களின் அன்புத் தந்தை

### கார்த்திகேசு சதாசிவம்

அவர்களின் மறைவையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Medcon (Pvt) Ltd**
ஊழியர்கள்.
(யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, றாகம)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் ஜெகதீஸ்வரி
**சற்குணரத்தினம்**
(ஆசிரியை- புவியியல்)

எட்டு ஆண்டுகள் கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
- உங்கள் முகம்!
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உங்களை காலமெல்லாம்
- நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம்
- உருகுகின்றோம்.
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 03.05.1965 மறைவு 05.08.2013

கொயிலாமனை, கொடிகாமம்.
குடும்பத்தினர்
077 177 3721

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை
**கார்த்திகேசு**
திதி: 07.08.2021



குடும்பத்தின் குலவிளக்காய்
வாழ்வை சுபீட்சமாக்கி
விதி வரைந்த வழிதனில்
எம்மை விட்டு பிரிந்து
ஆண்டுகள் மூன்றானாலும்
ஆற்ற முடியவிலலை
உங்கள் நினைவுகளை

8 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு,
யாழ்ப்பாணம்.

துயர்பகிரும்
குடும்பத்தினர்

மண்ணில் 01.08.1940 விண்ணில் 10.08.2018

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 . 09 . 1945 | 05 . 08 . 2021 |



### சூசைப்பிள்ளை சந்தானசாமி (SAM)

மலேசியாவை பிறப்பிடமாகவும் இளவாலை மற்றும் இங்கிலாந்தை(Watfort) வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை சந்தானசாமி **(SAM)** அவர்கள் 05.08.2021 வியாழக்கிழமை அன்று இங்கிலாந்தில் காலமானார். அன்னார் காலம்சென்றவர்களான சூசைப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும். காலம்சென்றவர்களான ராஜகோபால் கனகம்மா தம்பதியினரின அன்புமருமகனும். காலம்சென்ற சந்திராபாயின் (ராசா) அன்புக்கணவரும். ஆன் பாரதி. ஜோ சுகந்தன்(ஜோ) ஆகியோரின் அன்புத் தந்தையும். காலம்சென்ற பிலோமினா. ஜோசேப்பின் லில்லி மற்றும் மரியநாயகம் ஆகியோரின் அன்புத்தம்பியும். சிலோனின் அன்புப்பேரனாரும்(தாத்தா). ஜீன் பியர். யூட் இலங்காதரன்(USA) மற்றும் இனோயன் ஆகியோரின் அன்புமாமனாரும். அர்ஜனா. ஆதித்தன். அரவிந்தன். சுமங்கலி மற்றும் தியாகன் ஆகியோரின் பெரியதந்தையும். குமரன்(இந்தியா). யொஸ்மிலா(USA). Dr.அனோமிலன் மற்றும் பியோமிலன் ஆகியோரின் அன்புச்சிறியதந்தையும். காலம்சென்ற மகாதேவன். ஜெயக்குமார். ஆன் புனிதம். கௌரி(இந்தியா). ராஜசவுந்தரி(பாப்பா). தனபாலராஜா. கெங்காதரன்(பபி-UK). கதிர்காமசேகரன்(பபா-UK). நாகபூஷனி(பூசா) மற்றும் கமலேஸ்வரி(ஈசா-UK) ஆகியோரின் அன்புமைத்துனரும். காலம்சென்ற நாகராசன். ராஜேஸ்வரன். சந்திரிகா(UK). செல்வநேசன் மற்றும் திசைவீரசிங்கம்(UK) ஆகியோரின் சகலனுமாவார். அன்னாரின் நல்லடக்கம்பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
ஆன் பாரதி: 0044192346203З. ஜோசேப்பின் லில்லி:0094755414997
மரியநாயகம்: 0094767276457

தகவல்: மரியநாயகம்

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 05 . 1933 | 01 . 08 . 2021 |



### திரு. குணரத்தினம் கார்த்திகேசு

(Retired Asst Director of Agriculture, NorthEast Province, Sri Lanka National Consultant UN/FAO, Sri Lanka)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சிட்னி, அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. **குணரத்தினம் கார்த்திகேசு** அவர்கள் (01.08.2021) ஞாயிற்றுக் கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியினரின் ஏக புதல்வரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கருணேஸ்வரியின் அன்புக் கணவரும் சுரேகா, சுரேந்திரா, பாலேந்திரா, சத்தியேந்திரா, கஜேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகுமார், நிக்கி, ஹேமலதா, ஹொங், சோபனா, ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற மகேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கமலேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி , சிவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம் , லீலாநந்தேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ரெட்ணேஸ்வரி, காலஞ் சென்ற தனலெட்சுமி ஆகியோரின் அன்பு சகலனும் Dr.சரணியா, ஷோபியா, சரண், ரூபேஷ், ஆதேஷ், சொபியா, ரயன், சனந்தேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (09.08.2021) திங்கட்கிழமை முற்பகல் 9.00 - 11.45 (Sydney Time) மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை Magnolia Chapel, Macquarie Park Cemetery and Crematorium, Cnr Delhi and Plassey Roads, North Ryde NSW 2113 என்ற இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதிக் கிரியை அவரின் குடும்ப உறுப்பினர்களுடன் மட்டும் நடைபெறும். அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் இணையம் வழியாக பார்வையிடலாம்.

சுகுமார் : +44 778 968 1407
சுரேந்திரா : +61 447 246 857
பாலேந்திரா : +61 490 778 630
சத்தியேந்திரா : +61 488 038 639
கஜேந்திரா : +61 403 112 031

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா – பகுதி II
## 16.09.2021, 17.09.2021 மற்றும் 18.09.2021

கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுமாணி, பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், இளமாணி, தகைமைச் சான்றிதழ் ஆகிய பட்டங்களையும் சான்றிதழ்களையும் அளிப்பதற்காக 16.09.2021, 17.09.2021 மற்றும் 18.09.2021 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா- பகுதி II நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா பகுதி II இல் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் 16.08.2021 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் www.-jfn.ac.lk இனைப் பார்வையிடவும்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணி – 2020
4. சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி - 2020
5. கல்வியியலில் முதுமாணி - 2020
6. முது வியாபார நிர்வாகமாணி - 2018
7. முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - 2018
8. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் - 2020
9. வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி - 2021
10. விஞ்ஞானமாணி (பொது) – 2018
11. கலைமாணி (சிறப்பு) – 2018
12. நுண்கலைமாணி (பரதநாட்டியம்) – 2018
13. சட்டமாணி – 2019
14. வியாபார நிர்வாகமாணி (சிறப்பு) – 2018
15. வணிகமாணி (சிறப்பு) – 2018
16. விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2019
17. பொறியியல் விஞ்ஞானமாணி – 2019

### வவுனியா வளாகம்

1. தகவல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி - 2018
2. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் விஞ்ஞானமாணி - 2018
3. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு) - 2018
4. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது) - 2018
5. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) - 2018
6. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி - 2018
7. வியாபார முகாமைத்துவமாணி - 2018
8. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி – 2018
9. வியாபார முகாமைத்துவமாணி கணக்கீடும் நிதியும் - 2018
10. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி - 2018
11. வணிகப் பொருளியலில் வியாபார முகாமைத்துவமாணி - 2018
12. மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி - 2018

### அறிவுறுத்தல்கள்:

1. வேண்டுகோள்படிவங்களைச் சமர்ப்பித்தல் அனைத்து விண்ணப்பதாரிகளும் www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தின் ஊடாக வேண்டுகோள் படிவத்தினை 16.08.2021 இற்கு முன்னர் நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் பின்வரும் ஆவணங்களைத் தரவேற்றம் செய்யும் போது ஒவ்வொரு ஆவணமும் 2MB இற்கு மேற்படாது 'Jpeg' அல்லது 'jpg' முறைவடிவில் இருத்தல் வேண்டும்.
   1. பற்றுச்சீட்டு
   2. பட்டச்சான்றிதழில் பெயரினை உறுதிப்படுத்தும் விண்ணப்பம்
   3. அண்மைய புகைப்படம் (கடவுச்சீட்டு அளவு 35mmX45mm மெல்லிய நீல வெற்றுப்பின்புலத்தில்)

   நிகழ்நிலையில் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை த்ரவிறக்கம் செய்து கையொப்பமிட்டு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு 16.08.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் "35வது பட்டமளிப்பு விழா– பகுதி II, வேண்டுகோள் படிவம்" எனக் குறிப்பிடவும்.

**அஞ்சல் முகவரி**
**உதவிப் பதிவாளர் / அனுமதிகள் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி**

**2. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | |
|---|---|---|
| கட்டணம் | இளமாணிப் பட்டதாரிகள் | பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 750 | 2000 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | 750 | 1000 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 700 | 1000 |
| புகைப்படக் கட்டணம் | 600 | 600 |
| மொத்தக் கட்டணம் | 2800 | 4600 |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 |
| சமுமளிக்காதவர் | 970000052100340 | 970000082100351 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ அதற்கேற்ப மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். மேற் குறிப்பிட்ட குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.

குறிப்பு: பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3. பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் ஆவணக்காப்பகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது.
மேலதிக தகவல்களுக்கு 021 222 6714 அல்லது admissions@univ.jfn.ac.lk எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.
முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 16.08.2021**

**பதிவாளர்**

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16 07 1971

விண்ணில் 12 08 2015



## அமரர் சுரேஸ் சர்வாஜினி

(முன்னாள் விஞ்ஞான ஆசிரியை, யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை, வேலணை நடராசா வித்தியாலயம்)

அம்மா நாம் இருவரும் உங்களை நேரில்
காணவில்லை ஆனால் ஆண்டுகள்
ஆறு போனதம்மா நீங்கள் எங்களை விட்டு பிரிந்து
உங்களை புகைப்படத்தில் தான் காண்கின்றோம்.
நேரில் காணாமல் தவிக்கின்றோம் அம்மா.

**சிலும்பிலாட்டி,**
**ஏழாலை மேற்கு,**
**சுன்னாகம்.**

**உங்கள் பிரிவால் தவிக்கும்**
**கணவர், பிள்ளைகள், அம்மா,**
**சகோதரர்கள்**

## யாழ்ப்பாணம் மாநகர சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை உள்வாரி அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2021

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு 2013.01.01 ஆம் திகதி முதல் வழங்கப்பட்ட ஆளணி அங்கீகாரத்திற்கமைவாகவும் பிரதம செயலாளர், வடக்கு மாகாணம் அவர்களின் NP/01/02/03/01/14/Jaffna MC ஆம் இலக்க 2021.01.19 ஆம் திகதிய அனுமதிக் கடிதத்திற்கமைவாகவும் உள்ளுராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் NP/05/01/ US/JMC/01(04) ஆம் இலக்க 2021.01.20ஆம் திகதியதும் உள்ளுராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/1/ET/ Un.Sche/02/JMC ஆம் இலக்க 2021.01.25 ஆம் திகதியதுமான கடிதங்களிற் கமைவாகவும் மேற்பார்வையாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடங்களின் விபரம்**

| இல | பதவிப்பெயர் | தரம் | வெற்றிடம் |
|---|---|---|---|
| 01 | சுகாதார மேற்பார்வையாளர் | III | 06 |
| 02 | சந்தை மேற்பார்வையாளர் | III | 14 |
| 03 | வேலை/வெளிக்கள மேற்பார்வையாளர் | III | 04 |

**சம்பளம்**
2016.02.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் MN-1-2016 ஆகும். இதற்கமைய சம்பள அளவுத்திட்டமானது
27,140-10x300-11x350- 10x495- 10x660- 45,540 ஆகும்.

**சேவை நிபந்தனைகள்**
- இப் பதவி நிரந்தரமானதும் . ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
- ஊழியர் விதவைகள் /தபுதாரர்கள். அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- நியமனம் பெறுபவர்கள் ஒரு வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்

அடிப்படைத்தகைமைகள்
- விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளுராட்சி சேவையில் நிரந்தரமானதும் . ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
- மாநகர சபையின் நிரந்தர சேவையில் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் விண்ணப்ப இறுதித் தினத்தன்று 05 வருடங்களுக்கு குறையாத காலப்பகுதி தொடர்ச்சியாக வசித்து வருபவராகவும் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். (கிராம அலுவலரால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ்/வாக்காளர் இடாப்பின் மூலப்பிரதி மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

கல்வி தொழில் சார் தகைமைகள்
1. விண்ணப்பதாரி மாநகர சபையில் தேர்ச்சியற்ற சேவையில் (Unskilled) கடமையாற்றுபவராகவும் PL –I சம்பளத் தொகுதி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
2. **2013.01.01 ஆம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்றவர்கள்**
   கல்விப்பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் தமிழ்மொழி கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள் அனுபவம் என்பன விசேட தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும். 2013.01.01 ஆம் திகதியிலும் அதற்கு பின்னரும் நியமனம் பெற்றவர்கள் கல்விப்பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் தமிழ்மொழி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச்சித்தியும் பெற்றிருக்க வேண்டும். அத்துடன் மேலதிக தகைமைகள் அனுபவம் என்பன விசேட தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**
அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குழுவினால் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**
யாழ்ப்பாணம் மாநகர சபையின் தாபனப் பகுதியில் 2021.08.09 ஆம் திகதி முதல் உரிய விண்ணப்ப படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு 2021.08.23 ஆம் தியதியன்று அல்லது அத்திகதிகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது தாபனப் பகுதியில் சமர்ப்பிக்கவும்.

* ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் போதோ அல்லது நியமனத்திற்கு பின்னரோ தெரிய வரும் போது அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதென தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் இந்நியமனம் இரத்து செய்யப்படும் .
* விண்ணப்பத்தில் கோரப்பட்ட தகவல்கள் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
* சுகாதார மேற்பார்வையாளர், சந்தை மேற்பார்வையாளர், வேலை/வெளிக்கள மேற்பார்வையாளர், பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒவ்வொரு பதவிகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஒரே விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பிக்குமிடத்து அவ் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**06.08.2021**

குறிப்பு :- மேற்படி பதவிக்கு உள்வாரி அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு 2021.2.25, 2021.05.06 ஆம் திகதிகளில் வெளியிடப்பட்ட எமது விளம்பர அறிவித்தல்கள் இரத்துச்செய்யப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றாளர்கள்...

டுக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பி.சி.ஆர். அல்லது அன்ரிஜென் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டாலும் சுவாசிப்பதில் சிரமம் இல்லாதவர்கள் நோய் அறிகுறி அற்ற 2 தொடக்கம் 65 வயதுக்கு உட்பட்டவர்களே இவ்வாறு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்ட வழிகாட்டல்கள் கொண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் தனிமைப்படுத்தப்படுவோர் நன்கு காற்றோட்டம் உள்ள தனி அறையில் தங்கியிருத்தல் வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் போதுமான அளவு சுய பாதுகாப்பு காணப்படவேண்டும். தொடர்பு கொள்வதற்கான தொடர்பாடல் வசதியும் காணப்படவேண்டும். தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் மருத்துவக் குழுவினரால் நாளாந்தம் கண்காணிக்கப்படவுள்ளனர். தேவையேற்படின் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது பிராந்திய சுகாதார அதிகாரியின் பொறுப்பாகும். அந்த மருத்துவக் குழுவினர் நாளாந்தம் நோயாளியின் நிலைமை தொடர்பில் தொலைபேசி ஊடாக கேட்டு அறிவதுடன் மாற்றங்கள் காணப்படின், திடீர் சிகிச்சை பிரிவில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் 14 நாள்களின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

*120 ஆர்ப்பாட்டங்களால்..*

கொவிட் தடுப்பு விஷேட குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அவருடைய ஊடகப் பிரிவு தெரிவித்தது. ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

**சங்கடப்படுத்தாதீர்கள்**

கொவிட் நோய்த் தொற்று அறிகுறிகளுடன் மருத்துவமனைகளுக்கு வருகின்ற எந்தவொரு நோயாளியும் சங்கடத்துக்கு உள்ளாவதற்கு இடமளிக்கவேண்டாம் என்று சுகாதாரப் பிரிவு பிரதானிகளுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்தார்.

கொவிட் நோய்த்தொற்று அறிகுறிகள் காரணமாக, கொழும்பு உட்பட சில பிரதான நகரங்களிலுள்ள மருத்துவமனைகளுக்கு நாளாந்தம் வருகைதருகின்ற நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறு வருகைதருகின்ற நோயாளர்களின் நோய்த்தொற்றை உறுதி செய்துகொள்ளும்போது ஏற்படுகின்ற நெரிசல் காரணமாக அவர்கள் சங்கடங்களுக்கு ஆளாகக்கூடாது.

சில பிரதான நகரங்களுக்கு அண்மையில் மேலதிக இடைநிலை சிகிச்சை நிலையங்கள் பலவும் கடந்த மாதங்களுக்கு முன்னரே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எந்தவோர் அவசர நிலையிலும் தொற்றாளர்கள் சங்கடத்துக்கு ஆளாவதைத் தடுப்பதற்காகவே அந்தநிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, நோய்த் தொற்று அறிகுறிகள் காணப்படுகின்றவர்கள் முதலாவதாக மேலதிக சிகிச்சை நிலையங்களுக்கும் பின்னர் நோயாளியின் நிலைமையை அவதானித்து மருத்துவமனைகளுக்கும் அனுப்பிவைப்பதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

**பொறிமுறையை திட்டமிடுங்கள்**

மருத்துவமனைகளில் பொதுமக்கள் சங்கடத்துக்கு ஆளாவதைத் தடுப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் திட்டமிடுவதற்கு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் நேரடியாகப் பங்களிப்புச் செய்யவேண்டும்.

நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் வழங்குவது, சுகாதார நிபுணர்களின் பொறுப்பாகும்.

**தடுப்பூசி நிலையங்களில் இரு தரப்புக்கும் ஊசி போடவும்**

இரண்டாவது தடுப்பூசியை வழங்குகின்ற எந்தவொரு மத்திய நிலையத்திலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் இரண்டு தடுப்பூசிகளையும் வழங்கக்கூடிய அளவுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்றாவது தடுப்பூசியை வழங்கவேண்டி ஏற்பட்டால் அதற்கும் அரச தயாராக உள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

**மக்களின் ஒத்துழைப்பு போதாது**

அதன்போது, நோய்த் தொற்று பரவுவதைத் தடுப்பதற்காகப் பொதுமக்கள் வழங்குகின்ற பங்களிப்பு குறைந் துள்ளமை கவலைக்குரியதாக உள்ளது என்று விஷேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டினார்.

**தேசிய ஔடதங்களால் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு**

கொவிட் நோய்த் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பலர், தேசிய ஔடதங்களை தினந்தோறும் பயன்படுத்துகின்றனர். அது, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டாலும், தேசிய ஔடதங்களை தினம்தோறும் பயன்படுத்தல் மற்றும் முகத்துக்கு நீராவி பிடித்தல் போன்றவை நோய்த் தொற்றுக்குள்ளாவதைத் தடுக்கின்றது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார். என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

---

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## 11/2 வருடங்களின் பின் சந்தேகநபருக்கு பிணை

கொழும்பு, ஓக. 7

2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின்போது கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரியாகக் கருதப்படும் அலாவுதீன் அஹமட் என்பவரின் தந்தையை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல நேற்று உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரான அகமது லெப்பை அலாவுதீன் சுமார் ஒன்றரை வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபருக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டமா அதிபரின் ஆலோசனையைக் குற்றப் புலனாய்வு பிரிவு முன்னர் கோரியிருந்தது.

அதன்படி, சந்தேகநபருக்கு எதிராக எந்த ஆதாரமும் முன்வைக்கப்படாததால் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறிவித்திருந்தார். இதற்கமைய குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக் கமைய சந்தேகநபரை விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த-22)



# தண்டனை வழங்கிய பின்னர் விசாரணை

மாவட்டச் செயலரின் 'தலைகீழ்' நடைமுறை

யாழ்ப்பாணம், ஓக. 7

வீட்டுத்திட்ட முறைகேடுகளை அம்பலப்படுத்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றப்பட்டிருந்தார். அவருக்கு இடமாற்றமும், தண்டனையும் வழங்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு எதிராக விசாரணை முன்னெடுக்கப்படுவ தற்காகவே இடமாற்றம் வழங்கப்பட்டதாக யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தற்போது அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு கடந்த மாதம் 27ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலர் அனுப்பிய கடிதத்தில், அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்சரிக்கை செய்யப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். நிர்வாக நடைமுறைகளின்படி எச்சரிக்கை என்பது விசாரணையின் முடிவில் வழங்கப்படும் ஒரு தண்டனையே.

தாபன விதிக் கோவைகளுக்கு அமைவாக விசாரணை முன்னெடுக்கப்படாமல், தண்டனையும் இடமாற்றமும் வழங்கப்பட்டமையை எதிர்த்து அபிவிருத்தி அலுவலர் மேன்முறையீடு செய்திருந்தார். இந்த நிலையில் கடந்த 4ஆம் திகதிய கடிதம் மூலம், தாபன விதிக்கோவைக்கு அமைவாக விசாரணை முன்னெடுப்பதற்காகவே இடமாற்றம் வழங்கப்படுவதாக மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார்.

தண்டனையும், இடமாற்றமும் வழங்கிய பின்னர் முறையான விசாரணை முன்னெடுக்கப்பட வுள்ளதாக மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளமை நிர்வாக நடவடிக்கைகளை 'தலைகீழாக்கியுள்ளது'.

இடமாற்ற நடவடிக்கை திட்டமிட்ட பழிவாங்கும் நோக்கம் கொண்டது என்று குறிப்பிட்டு அமைச்சுக்கு மேன்முறையீட்டை அபிவிருத்தி உத்தியோகத்தர் மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிய வருகின்றது. (7)

## அவசியமானவர்களே பணிக்கு; திங்களிலிருந்து நடைமுறை

சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

கொழும்பு, ஓக. 7

நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் அத்தியாவசியமானவர்களை மட்டுமே அலுவலகங்களுக்கு அழைக்க வேண்டும் என்ற பணிப்புரையோடுகூடிய சுற்றறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

பொதுச்சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியின் கையொப்பத்துடன் குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றுக் காரணமாக, அரச அலுவலர்கள் இரு கட்டமாக பணிக்கு அழைக்கப்படுவார்கள் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்திருந்தார்.

அதன்படி, அரச அலுவலர்கள், இரண்டு கட்டங்களாக பணிக்கு அழைக்கப்படுவர். தவிர, கர்ப்பிணிகள், வீட்டிலிருந்து வேலைசெய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை...

இலங்கையில் தற்போது நிலவிவரும் கொரோனா நிலைமை குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்ற முக்கியமான கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த அறிவிப்பை அவர் விடுத்தார்.

இதன்படி அரச அலுவலகங்களுக்கு அனைத்து ஊழியர்களையும் அழைப்பதற்கான சுற்றறிக்கையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, தேவையான ஊழியர்களை மாத்திரம் பணிகளுக்கு அழைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த மாதத்தில் நடைபெறவிருந்த அனைத்து அரச நிகழ்வுகளையும் செப்ரெம்பர் முதலாம் திகதி வரையில் ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**திருமணம்**

இதேவேளை, திருமண நிகழ்வுகள் தொடர்பாகவும் கட்டுப்பாடுகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 500 இருக்கைகள் கொண்ட மண்டபங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 150 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் என்பதுடன், 500 இருக்கைகளுக்கும் குறைந்த மண்டபங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 100 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும்.

**இறப்பு நிகழ்வு**

அத்துடன் இறப்பு வீடொன்றில் ஒரு சந்தர்ப்பத்தில் 25 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும் என்றும் கொரோனாத் தடுப்புச் செயலணியால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

## முன்னாள்....

ரையே வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதி சமுகமளிக்குமாறு கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைக்கு அமைவாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக வருமாறு கடிதம் மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபரும் பூநகரி பிரதேச சபை உறுப்பினருமான சி. சிறிரஞ்சன் ஆகியோரை நாளை ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் வேழமாலிகிதனும் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-18)

## சங்கிலித்....

நகைகளை தானே திருடினேன் என்றும், அவற்றில் இரண்டு பவுண் நகை நிதி நிறுவனத்தில் அடகுவைக்கப்பட்டுள்ளதாகவும், மிகுதி அரைப் பவுண் நகை தன்னிடம் உள்ளதாகவும் தெரிவித்ததோடு, தன்னிடமிருந்த நகையை ஒப்படைத்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்

வட்டுக்கோட்டை மேற்கு கண்ணகி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள வீட்டிலிருந்து குறித்த இரண்டரை பவுண் நகை கடந்த புதன்கிழமை திருட்டுப் போயிருந்தது. அதனையடுத்து சி.சி.டி.வி. காட்சிகளை அடிப்படையாக வைத்து தமிழ் பொலிஸார் நடத்திய விசாரணையின் மூலமாக அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர் மூளாய் வேரம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர். இவருடன் இணைந்து திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்று கூறப்படும் நபர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-27)

## சந்நிதியான்...

சட்டத்தின் கீழ் மூடப்பட்டுள்ளது.

அந்த ஆச்சிரமத்துக்கு அதிக எண்ணிக்கையான பக்தர்கள் நேற்று அன்னதானத்துக்கு வந்திருந்தனர் என்றும் அதனால் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின்படி அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் குறித்த ஆச்சிரமம் மூடப்பட்டு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்திநிதி கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ள நிலையில், சுகாதாரக் கட்டுப்பாடுகளின்கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் திருவிழாக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

இந்தநிலையில், நேற்று நண்பகலுக்குப் பின்னர் சந்நிதியான் ஆச்சிரமத்தில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அதன்போது கட்டுப்பாடுகளை மீறி அதிகளவானோர் அங்கு அன்னதானம்பெற வந்திருந்தனர் என்றும் அதனால் மூடப்பட்டது என்றும் சுகாதாரத் தரப்புத் தெரிவித்தது. (த-26)

## ஒரேநாளில்...

தார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 98 பேரில் 54 ஆண்களும், 44 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா இறப்புகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 919 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் மேலும் 2 ஆயிரத்து 792 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 24 ஆயிரத்து 221 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,942 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 88 ஆயிரத்து 307 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## காரணமின்றி...

கைதுசெய்யப்பட்டு [illegible] பொலிஸாரால் கொழும்பு பிரதம நீதிவான் புத்திக ஸ்ரீராகலவிடம் நேற்று முற்படுத்தினர்.

அதன்போது, "ஒருவர் மீது குற்றச்சாட்டு சுமத்தும் அளவுக்கு தவறு இருந்தால் மாத்திரமே அவரை கைதுசெய்ய முடியும்" என்று சுட்டிக்காட்டிய நீதிவான், மாணவர் செயற்பாட்டாளர்களை தலா ஒரு லட்சம் ரூபா பிணையில் விடுவித்தார்.

இதேவேளை, பொலிஸாரால் கைது செய்யப்பட்ட, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் அமில சந்திப் ஆகியோரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவல்ல பிரதம நீதிவான் மஞ்சுள ரத்னாயக்க உத்தரவிட்டார்.

ரத்மலானை பொறப்பன வீதியில் அமைந்துள்ள நான்காவது பொறியியலாளர் பிரிவு இராணுவ படைத் தளத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் வீதித் தடையில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கைதுசெய்யப்பட்டார். முச்சக்கர வண்டி ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அமில சந்திப், நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டிருந்தார். (த-இ)

## அடக்குமுறைகளை...

முடியாது. நீங்கள் என்ன காரணத்துக்காக கைது செய்யப்படுகிறீர்கள் என்று தெரியாமல் நீங்கள் சிறையில் அடைக்கப்படலாம், உயிரிழக்கவும் வாய்ப்புள்ளது."

இவ்வாறு எச்சரித்துள்ளார், சிறிஜெயவர்த்தனபுர பல்லைக்கழகத்தின் விரிவுரையாளர் அமிந்த லக்மல்.

அவரை, சிவில் உடையில் வந்த பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்ய முயன்றதால் பரபரப்பு ஏற்பட்டது. இறுதியில், "தாம் தேடி வந்த நபர் அவரல்லர், ஆள்மாறி செயற்பட்டுவிட்டோம்" என்றுகூறி பொலிஸார் அங்கிருந்து விலகிச்சென்றுள்ளனர்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழக சட்டவரைவுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் போராட்டம் நடத்திவிட்டு பேருந்தில் திரும்புவதற்காக பல்கலைகழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், மருத்துவர்கள் தயாரானபோது, சிவில் உடையில் பேருந்துக்குள் ஏறிய மூவர், விரிவுரையாளர் அமிந்த லக்மலை இழுத்துச் செல்லமுயன்றனர்.

எனினும், பேருந்தில் இருந்த ஏனையவர்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, தம்மை மீரிஹான பொலிஸார் என அடையாளம் காண்பித்தனர்.

இருதரப்புக்குமிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர், தாம் தேடி வந்த நபர் அவரல்லர் என கூறி பொலிஸார் சென்றுள்ளனர். இந்த விடயம் பெரும் சர்ச்சையாகியுள்ளது. இது குறித்து முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள விரிவுரையாளர் அமிந்த லக்மல் பின்வரும் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

01. சிவில் உடையில் வந்து எதையும் சொல்லாமல் எந்த நபரையும் பொலிஸார் கைதுசெய்ய முடியுமா?

02. அவர்கள் பின்னர், ஒரு நபரைத் தேடி வந்தோம் என்று கூறினர், அது பல்கலைக்கழக மாணவ பிரதிநிதி வசந்த முதலிகே என்று அவர்கள் சொன்னார்கள். கடவுளே!, ஊடகங்களில் புகழ்பெற்ற வசந்தவை அவர்களால் அடையாளம் காண முடியவில்லையா?

03. கைதுசெய்யவரும் அவருக்கு அல்லது அவளுக்கு எதிராக பிடியாணை இருக்கக் கூடாதா? (சிவில் சட்டத்தின் கீழ்)

04. ஒளிப்படத்தின் மூலம் ஒருவரை கைதுசெய்வது அவசியமல்லவா? (அவர்கள் விரும்பும் நபர் பேருந்தில் இருக்கின்றார் என்று தகவல் கிடைத்தது என்று அவர்கள் கூறினர்)

05. பொலிஸார் கைது செய்ய முற்பட்டபோது கூட இருந்த விரிவுரையாளர்கள் எனக்கு ஆதரவாக இருந்தனர். ஆனால் சாதாரண குடி மகனுக்கு இப்படியொரு நிலைமை வந்திருந்தால் அவன் கதி என்னவாகியிருக்கும்?

06. இதை ஒரு வேடிக்கையான நிகழ்வாக நான் கண்டேன். இது நாட்டின் சட்டம் மற்றும் ஜனநாயகத்துக்கு கடுமையான அச்சுறுத்தலாக இல்லையா?

"அரசு அடக்குமுறையைத் தொடங்குகிறது. பொலிஸார் சம்பந்தமேயில்லாது என்னைக் கைதுசெய்யவந்தபோது என்னுடன் நின்ற சக விரிவுரையாளர்கள், எனக்குத் துணையாக, ஆதரவாக வாதாடினர். அது நாளை உங்களுக்கும் வரலாம். ஆனால் அது வரும்போது உங்களுக்காக யாரும் இருக்க முடியாது. நீங்கள் என்ன காரணத்துக்காக கைதுசெய்யப்படுகிறீர்கள் என்று தெரியாமல் நீங்கள் சிறையில் அடைக்கப்படலாம். இறக்க முடியும். இது ஒரு ஜனநாயக அரசின் பண்பு அல்ல. என்று குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## வவுனியா...

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றுக் காலை வெளியாகின.

அதில், வவுனியா வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆண் ஒருவருக்கு டெல்டா வைரஸ்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றுவந்த நிலையில் காய்ச்சல் காரணமாக அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன்போது மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அதனையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலும் அவருக்கு டெல்டா வைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். இந்த நிலையில், தொற்றாளரை கொவிட் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-18)

## தொற்று...

விடுத்துள்ளது. டெல்டா பிறழ்வு நாட்டில் சடுதியாக பரவிவரும் நிலையில், தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக சில வரையறைகள் விதிக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு அறிவித்துள்ளோம். பெருமளவில் ஒன்றுகூடும் மாற்றங்களால் நோய் வேகமாக பரவக் கூடும். என்றும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்சிலோனாவில் இருந்து வெளியேறினார் மெஸ்ஸி

பார்சிலோனா, ஓக. 7

ஸ்பெயினின் பார்சிலோனா கழகத்திலிருந்து வெளியேறியுள்ளார் சுமார் 21 ஆண்டுகளாக அந்தக் கழகத்துக்காக விளையாடி வந்தவரான லயனல் மெஸ்ஸி.

நெய்மர் பார்சிலோனாவில் இருந்து வெளியேறியதன் பின்னர் கழக நிர்வாகத்துக்கும் மெஸ்ஸிக்கும் இடையில் மனக்கசப்புக்கள் இருந்தன. அவர் கழகத்தை விட்டுச் செல்லப்போகின்றார் என்றும் விமர்சிக்கப்பட்டது. ஆனால், ஒப்பந்தம் முடியமுன்னர் கழகத்தை விட்டுச் சென்றால் மெஸ்ஸியை வாங்கும் கழகங்கள் பெரும் தொகைப் பணத்தை பரிமாற்றத் தொகையாக பார்சிலோனாவுக்குச் செலுத்த வேண்டிய சிக்கல் இருந்தது. தற்போது அவருடைய ஒப்பந்தம் முறையாக முடிவுக்கு வந்துள்ளதால் அந்தச் சிக்கல் இல்லை. மெஸ்ஸியும் பார்சிலோனாவில் தொடர விரும்பாததை அடுத்து அவரை விடுவித்துள்ளது கழகம். (ம)


## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமன் பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்திலிருந்து 400m தூரம் (பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி வரை) தரகர் தேவையில்லை.

**1½ பரப்பின் விலை 10 00000 (பத்து லட்சம்)**

**077 814 7389 / 077 614 7333**

## NVQ DMI COMPUTER EDUCATION

TVEC Reg.No.P25/0056

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் NVQ தகைமை

**Computer Applications Assistant** CAA

(Full Time - 3 Months, Part Time - 6 Months)

**ICT - NVQ LEVEL - 4** (Full Time - 6 Months)

Zoom online இல் ஆரம்பம் - 9/8/2021(Mon) 8.30 am

பதிவுகளை ஆகஸ்ட் 15 ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

**ICT - NVQ LEVEL - 5** NVQ 5 & 6 ஊடாக அரச பல்கலைக்கழக

Diploma in Information Technology (Full time - 1Year) பட்டதாரி ஆகும் சந்தர்ப்பம்.

**DMI COMPUTER EDUCATION**

No. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் 021 222 4403

M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470

A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி 021 228 5655 0777 240 707

## காணி விற்பனைக்குண்டு

ஊரெழு அம்மன் கோயில் அருகில் 15 பரப்பு (பிரித்தும் கொடுக்கப்படும்), தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் அருகில் 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு 077 275 7484 / 077 104 8865

## ONE BED ROOM APPARTMENT FOR RENTAL

சகல வசதிகளையும் கொண்ட வெளிநாட்டு நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் உண்டு

(நாவலர் வீதி TCTயிற்கு மிக அண்மையில்)

CONTACT : 077 6625 666

## நிரந்தர வேலை வாய்ப்பு

பிரபலமான காப்புறுதி நிறுவனத்தில் நிரந்தரமான வேலைக்கு பதவி வெற்றிடம் உள்ளமையால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.



| | |
|---|---|
| **பதவி நிலை - 1** PAC Wealth Planner | வேலை அனுபவம் : 2 வருடங்கள்<br>வயது : 25 - 40<br>சம்பளம் : 40, 000 (நிரந்தரம்) |
| **பதவி நிலை -2** Wealth Planner Manager | வேலை அனுபவம் : 2 வருடங்கள்<br>வயது : 25 - 40 |
| **பதவி நிலை - 3** Wealth Planner | வயது : 19 வயதிற்கு மேற்பட்டவர்கள் முழுநேரமாகவோ / பகுதிநேரமாகவோ பணிபுரியலாம். |

❖ நேர்முகத் தேர்வானது TEAMS / Zoom மூலம் நடைபெறும்.

ஆர்வம் உள்ளவர்கள் உங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை 076 523 1730 என்ற இலக்கத்திற்கு SMS மூலமாக அனுப்பி வைக்கவும்.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

மண்ணில் 18 . 12 . 1978

விண்ணில் 14 . 07 . 2021



### அமரர் திருமதி சுதர்சினி வசீகரன்

(ஆசிரியர் - யா/வேலணை மத்திய கல்லூரி)

எம் அன்புத் தெய்வமே!
பாசத்தின் மறு உருவமே!
அன்புச் சுவர்க்கமே!
எம் மனதில் நீங்கா இடம் பெற்ற
இந்த மலர்ந்த முகத்தை இனி காண கிடைக்குமா?
கண்ணம்மா! ஓடி வா உன்னை காணாது
அந்தரிக்கின்றோம்.

கடந்த 14.07.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு திருமதி சுதர்சினி வசீகரன் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை மறுதினம் (09.08.2021) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.08.2021 அன்று அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எமது துயரத்தில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு, உற்றார், உறவினர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து அன்பு உறவுகளுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துகொள்கின்றோம்.

நாட்டின் பொது சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளும் உறவுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மிகுந்த மன வேதனையுடன் அறியத்தருகின்றோம்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்
077 233 6283

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 . 07 . 1936

மறைவு 08 . 07 . 2021



கடந்த 08.07.2021 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

### பேரானந்தமணி சந்திரசேகரம்

அவர்களின் திடீர் மறைவு செய்திகேட்டு கொரோனா (Covid 19) கெடுபிடிகளையும் தாண்டி ஆறுதல் தெரிவித்தும் இறுதிக்கிரியைகளுக்கு வேண்டிய அனைத்து ஒழுங்குகளையும் புரிந்து உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் பனர்மூலமும் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தும், அனுப்பியும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் துயர்பகிர்ந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், மருத்துவ உதவிகள் புரிந்த வைத்தியர்களுக்கும், தாதிய ஊழியர்களுக்கும் எல்லா வழிகளிலும் எமக்கு ஒத்தாசை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

6 ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.